மலர்-4 இதழ்-82 ஜனவரி 16-31 2020 இலவச புத்தகம் www.aanmeegamalar.com

e- magazine

ஆன்மிகமலர் டிரஸ்ட் வெளியீடு

# ஆன்மிகமலர்

மாதமிருமுறை

ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

மெயில் புக்

உலக வரலாற்றில் முதன்முறையாக இ-மெயிலில் வெளியிடப்படும் இதழ்




## விபத்துக்கள், வீண்பழி, செய்வினைகளை தடுக்க

# காக்கைக்கு உணவிடுங்கள்

# திருநீறு மகிமை

மனித உடலிலே நெற்றி முக்கிய பாகமாகக் கருதப்படுகின்றது. வெப்பத்தை வெளியிடுவதிலும், உள்ளிழுக்கப்படுவதிலும் நெற்றி முக்கிய பங்காற்றுகின்றது.

இதனை கண்டுபிடித்த நம் முன்னோர், புடம்போட்ட பசுஞ்சானத்தின் மூலம் கிடைக்கும் சுத்தமான திருநீற்றை நெற்றியில் பூசி வந்தனர். சூரியக்கதிர்களின் சக்தியை இழுத்து சரியான முறையில் உள்ளனுப்பும் அற்புதமான பணியை இந்த திருநீறுசெய்கிறது.

தற்போது பல்வேறு வாசனை திரவியங்கள் கலக்கப்பட்டு விற்கப்படுவதால் திருநீற்றின் முழு பலனும் கிடைப்பதில்லை.

# மன ஒருமைப்பாட்டை தரும் சந்தனம்

நெற்றியின் இரு புருவங்களுக்கும் இடை யிலுள்ள நெற்றிப் பொட்டிலே பட்டும் படாமலும் சுண்டுவிரலை நேராகப்பிடித்தால் மனதில் ஒருவகையான உணர்வு தோன்றும். அந்த உணர்வை அப்படியே வைத்துத் தியானம் செய்தால், மனஒருமைப்பாடுதோன்றும், சிந்தனை தெளிவுபெறும், எதையும் தெளிவாகப் புரிந்து கொள்ளும் நிலை தோன்றும். இந்த முறையை கடைபிடிப்பவர்கள் அவசியம் சுத்தமான சந்தனத்தை பூசிவந்தால் பலன் அதிகரிக்கும்.



# மூளை சோர்வை நீக்கும் சந்தனம்

இரு புருவங்களுக்கும் இடையிலுள்ள பகுதியில் மிக நுண்ணிய நரம்பு அதிர்வலைகளை உள்ளன. அதனால் அந்த இடத்தைப் பயன்படுத்தி மனவசியம் இலகுவாகச் செய்யமுடியும். அதனாலேயே மனவசியத்தைத் தடுக்க அந்த இடத்தில் திருநீறு, சந்தனம் போன்றவை இடப்படுகின்றன.

நெற்றியில் வெளியிடப்படும் வெப்பத்தை சந்தனம் நீக்குகின்றது. அதிகமான வெப்பம் கூடிய நாடுகளில் வசிப்பவர்கள் நெற்றிப்பகுதியிலுள்ள frontal cortex என்னும் இடத்தில் தொடர்ந்து சந்தனத்தை பூசிவந்தால், வெப்பம் மிகுதியால் ஏற்படும் மூளைச்சோர்வு நீங்கும்.

# சிவனுக்கு சமம்

திருநீறு சிவனுக்கு சமமாக சித்தர்கள் கூறுகின்றனர். கோவில்களில் வாங்கும் திருநீற்றை வீணாக தரையிலோ, கல் தூணிலோ கொட்டக்கூடாது, கோவில் திருநீற்றை வீட்டில் பூஜை அறையில் வைத்து பயன்படுத்தினால் பலன் அதிகமாக இருக்கும்.

# தீய சக்திகளை விரட்டும் குங்குமம்

மஞ்சள், படிகாரம், சுண்ணாம்பு இவற்றைக் கலந்து குங்குமம் தயார் செய்யப்படுகிறது. இவை மூன்றுமே கிருமிநாசினிப் பொருட்கள் ஆகும். மனித உடலில் தெய்வ சக்தி வாய்ந்தது நெற்றிக்கண் அதாவது, இரண்டு புருவங்களுக்கு நடுவிலுள்ள பகுதியில் குங்குமத்தை வைத்தால் அமைதி கிடைக்கும்.

ஹிப்னாட்டிஸம் உட்பட எந்தச் சக்தியையும் முறியடிக்கும் சக்தி குங்குமத்துக்கு உண்டு, நம் கபாலத்தில் உள்ள சிந்தனை நரம்புகளின் முடிச்சு இரு புருவங்களுக்கு இடையில் உள்ளது. மனிதன் அதிகமாக சிந்திக்கும் போது சிந்தனை நரம்புகள் சூடேறி நெற்றி வலி தலைபாரம், தலைச்சுற்றல் ஏற்படும். மன உளைச்சல் ஏற்பட்டுத் தன் நிலை மறக்க வேண்டிய சூழ்நிலை உருவாகும். ஆகவே அந்த நரம்பு மண்டலம் குளிர்ச்சியாக இருக்க வேண்டும் என்பதற்காகவே, சந்தனம், திருநீறு, குங்குமம் இவற்றை அணியும் பழக்கத்தை நம் முன்னோர் உருவாக்கினர்.



நெற்றி நரம்பு மண்டலம் குளிர்ச்சியாக இருக்க வேண்டும் என்பதற்காகச் சந்தனம் பூசி, சந்தனம் காயாமல் இருக்க குங்குமம் இடுகிறோம். இவற்றைத் தரித்தால் புத்துணர்வும், புதுத் தெளிவும், புதிய சிந்தனைகளும், உற்சாகமும் தோன்றும். உணர்ச்சியற்ற நரம்புகள் தூண்டப்படுகின்றன. மனிதனின் உடற் கூறுக்கு உகந்த முறைகளைத்தான் நாம் இறைவழிபாடுகள் மூலம் அடைகிறோம்.

# அதிக பலன் தரும் சித்தர்கள் கோவில்

சித்தர் என்ற சொல்லுக்கு சித்தி பெற்றவர் என்று பொருள். சிவத்தை நினைத்து, அகக்கண்ணால் சிவத்தை கண்டு, தியானித்து, தரிசனம் செய்து, ஆத்ம சக்தியை எழுப்பி, தெய்வீக செயல்களையும், நினைத்த காரியங்களையும் செய்வர்கள்தான் சித்தர்கள். இதையே சித்து விளையாட்டு என்று அழைக்கின்றனர்.

இறைவனுக்கும் பக்தர்களுக்கும் சித்தர்கள் மிகப்பெரிய பாலமாக திகழ்கின்றனர். இதை அறிந்தவர்கள், சித்தர்கள் ஜீவசமாதி உள்ள கோவில்களை கேட்டு அறிந்து, தேடிச்சென்று தரிசனம் செய்து பலன் பெறுகின்றனர், செல்வமும், நல்ல ஆரோக்கியமும், மனதில் மகிழ்ச்சியும் பெற நினைப்பவர்கள் சித்தர்களின் தொடர்பு உள்ள கோவிலை நாடுவது நலம் பயக்கும்.

உதாரணத்திற்கு, தமிழக மக்கள் மட்டுமின்றி கேரளா மக்களும் பழனிமலை முருகனை மனம் உருக வழிபட காரணம் அங்கு போகர் சித்தர் ஜீவசமாதி உள்ளதே.

திருப்பதி மலை நோக்கி செல்வதற்கு காரணம், அங்கு கொங்கணவர் சித்தர் ஜீவசமாதி உள்ளதே.

தமிழகத்தில் இன்னும் பல்வேறு சித்தர்களுடன் தொடர்புடையகோவில்கள் அறியப்படாமல் உள்ளது. கோவிலுக்கு செல்லும்போது முதலில் கோவிலின் தலவரலாற்றை அறிந்து தெரிந்து கொள்வதே சிறந்தது.



# ஆன்மிக பாதையில் சென்றால் லௌகீக பாதை தன்னால் மாறும்

கோவிலுக்கு தொடர்ந்து போறேன்... பூஜை செய்யிறேன்... ஆனா ஒரு முன்னேற்றம் கூட இல்லைன்னு நிறைய பேர் புலம்புவதை கேட்டிருப்போம்.

இன்னும் ஒருசிலர்... ஆன்மீகத்தில் நாட்டம் இருக்கு... கூடவே குடும்பம், பிள்ளை, உறவினர்கள் என்ற பந்த பாசமும் அதிகம் இருக்கு... இதனால ஆன்மீக தேடுதலுக்கு ஏதாவது பிரச்சனை வருமோ? என்ற அச்சமும் ஏற்படுவதுண்டு.

இப்படி லௌகீக வாழ்க்கை, ஆன்மிக வாழ்க்கையை பாதிக்கும் என்ற பயம் உள்ளவர்கள் அவசியம் இதைப் படியுங்கள்...

ஸ்ரீ ருத்ரத்தின் இறுதியில், மஹா மிருத்யுஞ்சய மந்த்ரம் வரும். இந்த மந்திரம் மிகப் பிரபலமானது.



"த்ரயம்பகம் யஜாமஹேஸுகந்திம் புஷ்டிவர்தனம். உர்வாருகமிவ பந்தனாத் ம்ருத்யோர்முக்க்ஷீய மாம்ருதாத்."

இதில் 'உர்வாருகமிவ பந்தனாத் முக்க்ஷீய' என்ற வரிகளின் அர்த்தம்,

'வெள்ளரிப்பழம் அதன் கொடியிலிருந்து விடுபடுவதுபோல, என் பந்தங்களிலிருந்து நான் விடுபடவேண்டும்'

என்பதாக அமையும்.

எந்தப் பழமாயிருந்தாலும், பழுத்தவுடன், 'பட்'டென்று தன் கொடி, செடி அல்லது மரத்திலிருந்து அறுந்து விழுந்து விடும்தானே! இதில் வெள்ளரிப்பழத்தை மட்டும் ஏன் இந்த மந்திரத்தில் குறிப்பிட்டு சொல்லப்பட்டிருக்கிறது.

மஹா பெரியவா இதற்கு ஒரு அற்புதமான விளக்கம் அளித்திருக்கிறார்.

அதாவது, மற்ற பழங்கள் போல் அல்லாமல், வெள்ளரிப்பழம் கொடியில் பூத்துக் காய்த்துப் பழுக்கும். வெள்ளரிக்கொடி, தரையோடு தரையாய்ப் படரும். அதனால், வெள்ளரிப்பழமும், தரைத்தளத்திலேயே பழுத்துக்கிடக்கும். அது பழுத்தவுடன், அதைச் சுற்றியுள்ள கொடியின் கிளைகள், இலைகள் போன்றவை தன்னால் அந்தப் பழத்தை விட்டு விலகுமாம். அதாவது, பழம் கொடியிலிருந்து உதிர்வதில்லை. கொடிதான் பழத்தை விட்டு விலகுகிறது.



அதுபோல, ஞானிகளுக்கு, அவர்கள் பந்தம், பற்றை விட்டு விலக வேண்டுமென்பதில்லை. சரியான தருணத்தில், 'இவர் பழுத்து விட்டார்' எனத் தெரிந்தால், பந்தம், பற்று போன்றவை அவரை விட்டு தாமாகவே விலகிவிடும்.

எப்படி வெள்ளரிக்கொடி தன் பழத்தை விட்டு விலகுகிறதோ, அது போல லௌகீகமும் விலகி விடுமாம்.

கோவிலுக்கு போவது, கடவுளை வணங்குவது, வீடுகளில் பூஜை செய்வது போன்றவற்றை, எந்தவித சாங்கிய சம்பிரதாயம் தெரியாதவர்கள் கூட தொடர்ந்து செய்து வந்தால் அவர்கள் தன்னால் ஆன்மிகப் பாதையில் அழைத்துச் செல்லப்படுகிறார்கள் என பல்வேறு புராணக் கதைகள் உணர்த்தியுள்ளது.

மூங்கிலினால் பின்னப்பட்ட அழுக்கான கூடையில் எவ்வளவுதான் முயற்சி செய்தாலும் தண்ணீரை நிரப்ப முடியாது, மாறாக அழுக்கு



ஆன்மிகமலர் மெயில் புக்

கழுவப்பட்டு கூடை சுத்தமானதாக மாறி யிருக்கும்.

இதைப்போன்றுதான், லௌகீக வாழ்க்கையில் ஈடுபட்டாலும், தொடர்ந்து கோவிலுக்கு செல்வது, பூஜை செய்வது போன்ற ஆன்மிக விஷயங்களை தொடர்ந்து செய்து வந்தால், மனம் தன்னால் தூய்மையடையும்.

ஒரு கட்டத்தில் வெள்ளரிப்பழத்தைப் போன்று வெளிஉலக வாழ்க்கை தன்னால் பிரிந்து சென்றுவிடும்.

உதாரணத்திற்கு, பட்டினத்தார், அருணகிரி நாதர், கண்ணப்பநாயனார், ஔவையார்... போன்று எண்ணற்றவர்களை சொல்லலாம்.

இனி எந்தவித கலக்கமும் இன்றி உங்கள் ஆன்மிக பாதையில் செல்லுங்கள். கிடைக்கும் நேரத்தில் பிடித்த இறைவனின் பெயரை உச்சரியுங்கள், தினமும் ஒரு ஐந்து நிமிடமாவது கோவிலுக்கு செல்லும் பழக்கத்தை உருவாக்கிக் கொள்ளுங்கள்.

பணியின் இடையே கிடைக்கும் நேரத்தில் ஆன்மிக கருத்துக்களை தெரிந்து கொள்ளுங்கள்.

தொடர்ந்து செய்தால் மனதில் உள்ள தீமைகளும், வெளியில் உள்ள துர் சக்திகளும் உங்களைவிட்டு அகலுவதை கண்கூடாக தெரிந்து கொள்ளலாம்.

இந்து மதத்தில் மட்டும்தான் மனிதப் பிறப்புக்கு அதிக முக்கியத்துவம் தரப்பட்டுள்ளது.

அதைப் போன்று சுதந்திரமும் தரப்பட்டுள்ளது. எந்த இறை சிந்தனையையும், செயலையும் அவசியம் செய்ய வேண்டும் என்ற எந்த நிபந்தனையும் வரையறுக்கவில்லை.

இப்படித்தான் இறைவனை அடைய முடியும் என்ற எண்ணம் தோன்றக்கூடாது என்பதால்தான் நம் முன்னோர், பல்வேறு நாயன்மார்கள், ஆழ்வார்கள் வாழ்க்கை வரலாற்றை கூறியுள்ளனர்.

இந்து மதத்தின் ஒரே குறிக்கோள் மனதை இறைவனுக்கு அர்ப்பணிப்பது மட்டுமே, அது எப்படி வேண்டுமானாலும் இருக்கலாம். இல்லறத்தில் இருந்து கொண்டே இறைவனை ஆராதித்தாலும் இறைவன் ஏற்றுக் கொள்வார் என்பதுதான் உண்மை.



# திருவோடு

திருவோடு என்பது சிவ பூஜைக்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது. இந்த திருவோட்டில் திருநீறு போட்டு பயன் படுத்தினால் அதிதப் பலன் கிடைக்கும். சிவ வழிபாடு செய்பவர்கள் பெரும்பாலானோர் இந்த திருவோட்டை பூஜையறையில் பயன்படுத்துகின்றனர்.

திருவோடு என்பது ஒரு மரத்தின் விதை..!

நம்மூரில் சாமியார்கள் கைகளில் திருவோடு வைத்திருப்பதை பார்த்திருப்பீர்கள்..

அதில் அவர்கள் யாசகம் பெற்று உயிர் வாழ்வார்கள். இந்த திருவோடு ஒரு மரத்தின் விதை. இந்த திருவோடு உலகத்திலேயே மிகப் பெரிய விதையான கடல் தேங்காயின் ஓடு.

கடல் தேங்காய்க்கு நிறைய பெயர்கள் உண்டு. திருவோட்டுக்காய், இரட்டைத் தேங் காய், கடல் பனை, மாலத்தீவுத் தேங்காய் என.

இதன் விதைகளை பாதியாக அறுத்து சுத்தம் செய்து திருவோடாக மாற்றுகிறார்கள்.

திருவோட்டுக்காய் பார்ப்பதற்கு பெரிய சைஸ் தேங்காய் போலவே இருக்கும். மரமோ பனை மரம் போல இருக்கும். இதன் பிறப்பிடம் 'சிசெல்ஸ்' தீவுகள். இவை எல்லா இடங்களிலும் வளர்வது இல்லை.

இந்தியப் பெருங்கடலில் பிரஸ்லின் என்ற தீவில்தான் அதிகமாக வளர்கிறது.

இதிலும் பனை மரத்தை போலவே ஆணும், பெண்ணும் உண்டு. ஆண் மரங்கள் 6 அடி நீளம் கொண்ட பூக்களை மலர்விக்கின்றன. பெண் மரங்கள் முளைக்கத் தொடங்கி 100 வருடங்கள் கழித்தே பூக்கத் தொடங்குகின்றன. பூ மலர்ந்து காயாக மாறி முற்றுவதற்கு 10 வருடங்கள் ஆகும்.

காய் பெரிய தேங்காய் மாதிரி இருக்கும். நார் அடர்த்தியாக இருக்கும். ஓட்டுக்குள் உள்ள கனிப் பகுதி முதலில் பனை நுங்கு போல் இருக்கும். முற்றிய பின் தேங்காய் போல சுவைக்கும்.

முற்றிய காய் உதிர்ந்து கடலில் மிதந்து கரையில் ஒதுங்கும். மாலத்தீவில் ஏகப்பட்ட காய்கள் கரை ஒதுங்குகின்றன. கடல் நீரோட்டத்தின் மூலமே விதை பரவுகிறது.

விதை முளைக்கத் தொடங்கி முதல் இலை தோன்றுவதற்கு மூன்று ஆண்டுகள் ஆகின்றன. 90 அடி உயரம் வளர்கிறது. இதன் சுற்றளவு 12 அடி. இலைகள் விசிறி வடிவில் பனை இலை மாதிரியே இருக்கும். ஆனால், ஒரு இலை 21 அடி நீளமும், 12 அடி அகலமும் கொண்டதாக இருக்கும்.

இதன் விதை ஒன்றின் எடை 7 கிலோ முதல் 23 கிலோ வரை இருக்கும். இந்த விதை தானாக முளைத்தால்தான் உண்டு. தோட்டங்களில் முளைக்க வைக்க எவ்வளவோ முயன்றார்கள். ஒன்று கூட முளைக்கவில்லை. அப்படியே தப்பி தவறி முளைத்தாலும் வெகு சீக்கிரமே அழிந்துவிடும். திருவோடு இத்தனை சிறப்பு பெற்றது.



# தொடர்பு இணைப்பு

இராமகிருஷ்ண மடத்தின் சார்பில் நியூயார்க்கில் பல்வேறு இடங்களில் சொற்பொழிவாற்றினார் விவேகானந்தர்.

ஆன்மிகத்தில் தெளிவில்லாமல் குழப்ப நிலையில் இருந்த பலர் இவரின் சொற்பொழிவின் மூலம் தெளிவடைந்தனர்.

இதுபோன்று ஒரு இடத்தில் "தொடர்பு" "இணைப்பு" பற்றிய சொற்பொழிவாற்றினார்.

பெரும்பாலானோர் தெளிவடைந்தாலும் ஒருசிலருக்கு இந்த சொற்பொழிவின் கருத்தாழத்தை புரிந்து கொள்வதில் சிரமம் இருந்தது.

நியூயார்க் பத்திரிக்கையாளர் ஒருவருக்கும் இந்த கருத்தை சரியாக புரிந்து கொள்ள முடியாமல், விவேகானந்தரிடமே இதுகுறித்து பேட்டி எடுப்பதாக இருந்தது.

திட்டமிட்டபடி பத்திரிக்கை நிரூபர் பேட்டியை ஆரம்பித்தார்.

நிரூபர்: ஐயா உங்களுடைய முந்தய சொற்பொழிவில் "தொடர்பு" மற்றும் "இணைப்பு" என்பது பற்றி பேசினீர்கள், அது உண்மையிலேயே மிகவும் குழப்பமாக இருந்தது. சற்று விளக்கி சொல்ல முடியுமா? என்றார்.

விவேகானந்தர் முன்முறுவலோடு நிரூபர் கேட்ட கேள்வியிலிருந்து விஷயத்தை திசை திருப்புகின்ற விதமாக, அந்த நிரூபரிடம் கேள்வி கேட்டார்,

நீங்கள் நியூயார்க்கில்தான் வசிக்கிறீர்களா?

நிரூபர்: ஆம்.

விவேகானந்தர்: வீட்டில் யாரெல்லாம் இருக்கிறார்கள்?

இந்த துறவி என் சொந்த வாழ்வைப்பற்றியும், தேவையற்ற கேள்விகளையும் கேட்டு தன்னுடைய கேள்விக்கு பதில் தருவதை தவிர்க்க முயற்சிக்கிறார், என்று நிரூபர் நினைத் தார், இருந்தாலும் துறவியின் கேள்விக்கு "என் தாயார் இறந்து விட்டார், தந்தையார் இருக்கிறார், மூன்று சகோதரர்கள் மற்றும் ஒரு சகோதரி இருக்கிறார், அனைவருக்கும் திருமணம் ஆகிவிட்டது என்று பதிலளித்தார்.

விவேகானந்தர் முகத்திலே புன்னகையுடன், நீங்கள் உங்கள் தந்தையுடன் பேசுகிறீர்களா? என்று மீண்டும் கேட்டார்.

இப்போது நிருபர் சற்று எரிச்சலடைந்து விட்டார்....

விவேகானந்தர்: கடைசியாக எப்போது அவரிடம் பேசினீர்கள்?

நிரூபர்: எரிச்சலை அடக்கிக்கொண்டு, "ஒரு மாதத்திற்கு முன்பு இருக்கலாம்" என்றார்.

விவேகானந்தர்: உங்களுடைய சகோதர சகோதரிகளை அடிக்கடி சந்திப்பதுண்டா? குடும்பமாக சந்தித் தது கடைசியாக எப்போது? என்றார்.

இப்போது அந்த நிரூபரின் நெற்றியில் வியர்வை தெரிந்தது.

இதைப் பார்த்தால் விவேகானந்தர்தான் நிரூபரை பேட்டி காண்பது போல இருந்தது.

நீண்ட பெருமூச்சுடன் நிரூபர் சொன்னார், "இரண்டு வருடங்களுக்கு முன் சந்தித்தோம்" என்று.

விவேகானந்தர்: எல்லோரும் சேர்ந்து எத்தனை நாட்கள் இருந்தீர்கள்?

புருவத்தின் மீது வடிந்த வியர்வையை துடைத்தவாறே நிரூபர் "மூன்று நாள்" என்றார்.

விவேகானந்தர்: உங்களுடைய அப்பாவின் அருகில் அமர்ந்து, அவரோடு எவ்வளவு நேரம் கழித் தீர்கள்?

இப்போது நிரூபர் பதட்டத்துடனும் சங்கடத்துடனும் ஒரு காகிதத்தில் ஏதோ கிறுக்க ஆரம்பித்தார்.....

விவேகானந்தர்: எல்லோரும் ஒன்றாய் அமர்ந்து காலை உணவு, மதிய உணவு அல்லது இரவு உணவை சாப்பிட்டீர்களா? அம்மா இறந்த பிறகு நாட்களை எப்படி கழிக்கிறீர்கள் என்று அப்பாவிடம் கேட்டீர்களா?

இப்போது நிரூபரின் கண்களில் இருந்து கண்ணீர் துளிகள் கீழே விழத் தொடங்கியது.

விவேகானந்தர் அந்த நிரூபரின் கைகளை பற்றிய வாறு கூறினார், "சங்கடப்படாதீர்கள், மனம் உடைந்து போகாதீர்கள், கவலையும் கொள்ளாதீர்கள். தெரியாமல் உங்கள் மனதை நான் புண்படுத்தி இருந்தால் என்னை மன்னி யுங்கள்.......

ஆனால் இதுதான் நீங்கள் "தொடர்பு மற்றும் இணைப்பு" பற்றி கேட்ட கேள்விக்கான பதில். நீங்கள் உங்களுடைய அப்பாவுடன் தொடர்பில் இருக்கிறீர்கள் ஆனால் அவரோடு நீங்கள் இணைப்பில் இல்லை.

நீங்கள் அவரோடு இணைக்கப்படவில்லை. "இணைப்பு என்பது இதயத்துக்கும் இதயத் துக்கும் இடையே இருப்பது..."

ஒன்றாய் அமர்ந்து, உணவை பகிர்ந்து, ஒருவர்மீது ஒருவர் அக்கரை கொண்டு, தொட்டுக்கொண்டு, கைகுலுக்கி, கண்களை நேருக்கு நேர் பார்த்து, ஒன்றாய் சேர்ந்து, நேரத் தை செலவிடுவதுதான் இணைப்பு (connection) நீங்கள், உங்கள் சகோதர சகோதரிகளுடன் தொடர்பில் (contact) இருக்கிறீர்கள் ஆனால் நீங்கள் யாரும் இணைப்பில் இல்லை என்றார்.

இப்போது நிரூபர் கண்களை துடைத்துக் கொண்டு, "எனக்கு அருமையான மற்றும் மறக்க முடியாத பாடத்தை சொல்லித் தந்ததற்கு மிக்க நன்றி ஐயா" என்றார்.

இதுதான் இன்றைய வாழ் வின் நிஜமாக இருக்கிறது. வீட்டில் ஆகட்டும் அல்லது சமுதாயத்தில் ஆகட்டும் ஒவ்வொருவரும் நிறைய தொடர்பை வைத் திருக்கின்றனர் ஆனால் இணைப்பில் இருப்பதில்லை. எல்லோருமே அவரவர் சொந்த உலகில் மிகவும் பரபரப்பாக இருக்கின்றனர்.

நாம் இதுபோல "தொடர்பை" பராமரிக்காமல், "இணைப்பில்" வாழ்ந்தாலே சமுதாயத்திலும், வீட்டிலும், மனதிலும், நிம்மதியும், மகிழ்ச்சியும் தன்னால் உருவாகிவிடும்.

பணம் அவசியம்தான், ஆனால் அது மட்டுமே அவசியம் என்று பெரும்பாலானோர் நிம்மதியை தொலைத்துக்கொண்டு, இறைவனிடம் நிம்மதி தரச்சொல்லி வேண்டிக்கொள்வது அறியாமைதான்.



# பிரச்சனைகளுக்கு காரணமான சாபம்



ஒருசிலர் நல்லவர்களாக இருப்பார்கள் எந்த தீங்கும் செய்திருக்க மாட்டார்கள் ஆனாலும் அவர்களுக்கு ஒரு சில பிரச்சனைகள், துன்பங்கள் தொடர்ந்து கொண்டே இருக்கும். இதற்கான காரணத்தை ஆராய்ந்து பார்த்தால் கோபம்தான் பிரதானமாக இருக்கும்.

சாபம், பாவம் இவைகளிலெல்லாம் சிலருக்கு நம்பிக்கை இருக்கும், சிலருக்கு நம்பிக்கை இருக்காது.

ஆனால் மனிதன் செய்யும் சில தவறுக்கு தண்டனை என்பது நிச்சயம் உண்டு. அந்த தண்டனையை தான் நம் முன்னோர்கள் சாபம் என்ற பெயரிலும் பாவம் என்ற பெயரிலும் கூறி விட்டு சென்றுள்ளார்கள்.

அந்த வகையில் நாம் அன்றாட வாழ்வில், நம்முடைய இயலாமையின் காரணமாகவும், கோபத்தின் காரணமாகவும் நம்முடன் இருக்கும் சிலரை திட்டி விடுவோம். அதுவும் மற்றவர்களது மனது புண்படும் படியான வார்த்தைகளை பேசி சிலர் திட்டி விடுவார்கள்.

நாம் கோபம் தணிந்த பிறகு, செய்த தவறை எண்ணி வருத்தப்பட்டாலும், நம் கொட்டிய வார்த்தைகளை நம்மால் திரும்பவும் அள்ள முடியாது.

உங்களால் பாதிக்கப்பட்டவர்களின் கண்ணீரும், மனவருத்தமும் நிச்சயமாக உங்களை தாக்கும். நம் வாயிலிருந்து வரக்கூடிய கடுமையான வார்த்தைகள் சில நாட்களுக்குப் பின்பு நம்மையே தாக்கும் அளவிற்கு வலிமை கொண்டது. ஆகையால் எந்த சூழ்நிலையிலும் மற்றவர்களை வஞ்சித்து பேசி விடாதீர்கள். அந்த வகையில் யாரை எல்லாம் நாம் வஞ்சித்து பேசக் கூடாது என்பதை பற்றி தெரிந்து கொள்வோம்.

## பெண்:

குறிப்பாக நம் வீட்டிற்கு மருமகளாகவாழ வந்திருக்கும் பெண்ணை வஞ்சகமான வார்த்தையினாலோ, இழிவான வார்த்தையானாலோ, அவள் மனம் நோகும்படியோ திட்டவே கூடாது. பிறந்த இடத்தைவிட்டு, சொந்த பந்தங்களை விட்டு, தன் தாய் தந்தையை விட்டு, கணவனை நம்பி மட்டும் வந்த ஒரு பெண்ணின் மனது வருத்தப்படும் படி நடந்து கொள்ளும் ஒருவருக்கு சமமானது கண்டிப்பாக பின் தொடரும். நம் வீட்டில் வசிக்கும் பெண்ணின் கண்களிலிருந்து வரும் ஒரு துளி கண்ணீரும் சாபம்தான்.

## குழந்தைகள்:

குழந்தைகள் என்றாலே அந்த தெய்வத்திற்கு சமமாக தான் பார்க்க வேண்டும். அவர்களுக்கு நல்லது கெட்டது என்பது தெரியாது. அந்தபிஞ்சு மனது வருத்தப்படும் படி எக்காரணத்தைக் கொண்டும் பேசி விடக்கூடாது. நாம் எதற்காக திட்டுகின்றோம் என்பதையே அந்த குழந்தையால் அறிந்துகொள்ள முடியாது. அப்படி இருக்கும்போது நாம் திட்டுவது பாவச் செயல் தானே.

## தாய் தந்தையர்:

நமக்கு உயிர் கொடுத்து இந்த பூமிக்கு நம்மை கொண்டுவரும் தெய்வங்களே இவர்கள்தான். ஆனால் நம்மில் சிலர் இவர்களை சிறிதளவும் மதிப்பது கூட கிடையாது. இது நிச்சயமாக உங்களது பாவக் கணக்கில் சேர்ந்து விடும். இன்றைக்கு நீங்கள், உங்கள் தாய் தந்தையரை எப்படி நடத்துகிறார்களோ, அப்படித்தான் நாளை உங்களது மகன் உங்களை வழி நடத்துவான் என்பதை மறந்து விடாதீர்கள். நீங்கள் பேசும் கடுமையான வார்த்தைகள் பெற்றவர்களின் மனதினை காயப்படுத்தினால் அது உங்களைப் பின் தொடரும் என்பது நிச்சயம்.

## குரு:

நம் வாழ்க்கையை முன்னேற்றப் பாதையில் கொண்டு செல்வதற்கான முதல்படி கல்விதான். அந்த கல்வியை நமக்கு கற்றுக் கொடுப்பது குரு. மாணவர்கள் தவறு செய்யும்போது அவர்களை தட்டிக் கேட்பது குருவின் கடமை. தவறு செய்யும் மாணவர்களை தட்டிக் கேட்டால் தான், தவறுகளை உணரும் மாணவர்கள் நல்ல வழியில் வளர்ச்சி அடைவார்கள். அப்படிப்பட்ட ஆசிரியர்களை தகாத வார்த்தைகளில் கூறும் சில வகை மனிதர்களும் இந்த பூமியில் உள்ளார்கள். ஒரு குருவை இழிவாக நடத்தும் ஒருவருக்கு பாவம் நிச்சயம் வந்து சேரும்.

## நோயாளிகள்:

நோயாளிகளையும், இயலாமை கொண்டவர்களையும் நம் வஞ்சித்து பேசக்கூடாது. நாம் ஒருவரிடம் சண்டை போடுவதாக இருந்தாலும் கூட அவர்கள் நமக்கு சமமானவர்களா என்பதை பார்க்க வேண்டும். நம்மைவிட பலம் குறைந்தவரிடம் போய் சண்டை போடக்கூடாது. அதாவது நமக்கு பாவம் செய்தவர்களாக இருந்தாலும் கூட, அவர்களது சூழ்நிலை சரியில்லாத சமயத்தில் அவர்களை பழி வாங்குவது என்பது மிகவும் தவறான ஒன்று. அவர்கள் கஷ்டப்பட்டு கொண்டிருக்கும் சமயத்தில், அவர்களின் இயலாமையை சுட்டிக்காட்டி ‘நீ செய்த பாவம் தான் உன்னை இப்போது பாடாய்படுத்துகிறது’ என்று கூறுவது கூட பெரிய தவறு தான். அது தர்மமும் அல்ல. அப்படி இருக்கும்போது நோயாளிகளிடம் கோபமாக பேசுவதையே தவிர்க்க வேண்டும்.

# மனிதனும் மனமும்

நம் மனம் இருக்கிறதே ஆட்டம் போட எதுவும் கிடைக்காத பொழுது ரொம்ப அடக்கமாகவும் சுவாமி மீது பக்தி பன்னுவது போலவும் நம்மை போல புண்ணியசாலி யார் இருக்கிறார்கள்?? என்றும் எண்ணி கொண்டு நல்லவன் போல வேஷம் போடும்.

ஆனால் தப்பு செய்யும் வாய்ப்பு கிடைத்ததோ இல்லையோ!?

சாமியாவது பூதமாவது!? அதெற்கெல்லாம் வயசு இருக்குயா!! இப்பவே ருத்ராட்சம் போட்டுகிட்டு திருநீறு பூசிகிட்டு காசி இராமேஸ் வரம்னு போய்ட்டா வாழ்க்கைய அனுபவிக்கிறது யாருனு?? கேட்கும்.

ஏதாவது கஷ்டம் வந்து விட்டால் கோயில் குளம் சாமி எல்லாம் அப்போதுதான் ஞாபகம் வரும்.

இதுவே வாழ்க்கை சுமூகமாக ஆகிவிட்டால், பழையபடி ஆட்டம் போடும்!!



ஒரு நாய், இரவு முழுக்க குளிர் தாங்க முடியாமல் திண்ணையில் படுத்திருக்கும் பொழுது

"என்னா குளிரு??" விடிஞ்சதும் முதல் வேலையா போய் ஒரு நல்ல போர்வையா வாங்கி டனும் அப்பதான் நாளைக்கு உயிரோட இருக்க முடியும்னு நினச்சிக்குமாம், ஆனால் பொழுது விடிஞ்சதும்...

சூரியன் "தகதக" என்று வெப்பத்தை பரப்பி கொண்டு வருவதை பார்த்தவுடன்,

"அடாடா!! எவ்ளோ பெரிய தப்பு பன்னிட பாத்தோம்!! இந்நேரம் போர்வை வாங்கியிருந்தா காசில்ல வீணா போயிருக்கும்!!"னு நினச்சிக் குமாம்

மீண்டும் அன்றைக்கு இரவு போர்வை வாங்கியே தீரனும்னு நினச்சிக்குமாம்

இதுதான் நம்மில் பலரது கடவுள் வழிபாடும்!! துன்பம் வரும்போது கடவுள் பற்றி நினைப்போம், நன்றாக வாழும்போது, கடவுள் வழிபாட்டுக்கு வயது இருக்கிறது என்று நினைப்பதோடு அல்லாமல், இளமையில் கும்பிடுபவர்களையும் கெடுப்போம்!!

சும்மாவா பாடினார்கள் பெரியவர்கள்;

"ஒன்றுமே பயனில்லை என்று உணர்ந்த
பின் சிவன் உண்டு என்பார்!!
ஒவ்வொரு மனிதரும் ஒருநாள் இந்நிலை
எய்துவது உறுதி இதை மறந்தார்!!
அன்று செயல் அழிந்து தலம் வரும்
பொழுது சிவன் பெயர் நாவில் வாராதே!!
ஆதலினால் மனமே இன்றே சிவன் நாமம்
சொல்லி பழகு!!
நம்பி கெட்டவர் எவர் ஐயா?? உமை
நாயகனை திருமயிலையின் இறைவனை!!"




# ஆன்மிகமலர் மெயில் புக்




மாதம் தோறும் இரண்டு இதழ்களாக
(இ-புக் வடிவில்) வெளிவரும்
ஆன்மிகமலர் மெயில் புத்தகத்தில் நீங்களும்
இணைந்து ஆன்மிக சேவையாற்றலாம்....

உங்கள் பகுதியில் உள்ள கோயில்களின் சிறப்புகள்,
மகான்களின் சிறப்புகள், மற்றும் உங்களுக்கு தெரிந்த
ஆன்மிக செய்திகளையும் எங்களுடன் பகிருங்கள்...

30ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஆன்மிக அன்பர்கள்
படித்து பயன்பெற ஒரு பாலமாக இருப்போம்

மேலும் தகவலுக்கு 8825844033 என்ற
வாட்சப் எண்ணிலும் தொடர்பு கொள்ளலாம்

# தீமைக்கும் பயன்படும் சக்கரங்கள்

சக்கர வழிபாடு என்பது பல வகைகளில் பல்வேறு பலன்களைத் தரவல்லதாக வகுக்கப்பட்டுள்ளது.

சக்கர வழிபாடுகளிலேயே மிகவும் சிறப்பு வாய்ந்தது ஸ்ரீ சக்கர வழிபாடு.

நல்லது என்ற ஒன்று இருந்தால் தீயது இருக்கத்தான் செய்யும், அந்த வகையில்தான் ஒரு சில தீய சக்கரங்களும் உள்ளது.

தற்போதைய நடைமுறையில் இந்த தீய சக்கரங்கள் என்பது மனித குலத்திற்கு பல்வேறு பாதிப்புகளை ஏற்படுத்தும் என்பதை உணர்ந்த சித்தர்கள், ஞானிகள், யோகிகள் இந்த தீய சக்கர முறையை மறைத்துவிட்டனர்.

இந்த வகையில் விபரீதங்களை விளைவிக்கும் சில சக்கரங்களைப் பற்றி பார்ப்போம். முதலில் அகத்தியர் அருளிய விருட்ச மாரண சக்கரம்.

## விருட்ச மரண சக்கரம்

இது எத்தகைய மரத்தையும் மாரணம் செய்விக்குமாம். இதனை அகத்தியர் பின்வருமாறு விளக்குகிறார்.

"பாரேதான் புலத்தியனே பண்புளானே
பாலகனே ஓரறிவுக் குற்றசாதி
நேரேதான் விருட்சங்க ளெதுவானாலும்
நேர்மையுடன் மார்க்கத்தை விளம்பக்கேண்மா"

"விதியான விருட்சமாரண சக்கரந்தான்
பதியான வைந்துவரை குறுக்கே கீறி
பாவலனே யைந்துவரை நெடுக்கேகீறி
மதியோடு மாளியது பதினாறாச்சு
மானிலத்தில் நாதாக்கள் மறைத்தசேதி"

– அகத்தியர்

விருட்சங்களுக்கு விதியாய் அமையும் இந்த விருட்சமாரணச் சக்கரத்தை பூமியில் சித்தர்கள் மறைத்தார்கள்.

நான் உனக்கு சொல்கிறேன் கேள் என துவங்குகிறார்.... குறுக்காக ஐந்து கோடும் நெடுக்காக ஐந்து கோடும் கீற பதினாறு அறைகள் உருவாகும். அந்தக் கோடுகளின் நுனியில் சூலம் கீறி அந்த அறைகளுக்குள் இடவேண்டிய எழுத்துக்களையும் தனது பாடலில் குறிப்பிடுகிறார்.

இவ்வாறு தயாரித்த சக்கரத்தினை...

"தீர்க்கமுடன் விருட்சத்தின் அடிப்பாகத்தில்
அப்பனே சாண்நிகளஞ் சதுரந்தோண்டி
கேளப்பா சக்கரத்தை அதன் கீழ்ப்போட்டு
மணலாலே மூடே மூன்றேநா ள்தனிலே
நலமான விருட்சமது பட்டுப்போகும்
நாசமாம் விருட்சமது நாசமாகும்



நாயகனே பச்சைமரம் பட்டுப் போகும்
வீணருக்கு உரைத்திடாதே கேடுவிழையும்"

– அகத்தியர்

குறிப்பிட்ட விருட்சத்தின் அடிப் பக்கத்துக்கு அண்மையில் ஒரு குறிப்பிட்ட அளவு ஆழத்துக்கு சதுரமாக ஒரு குழி தோண்டி அதில் இந்தச் சக்கரத்தைப் போட்டு மண்ணால் மூடிவிட்டால் மூன்று நாளில் அந்த பச்சை மரம் பட்டுப்போய் நாசமாகிவிடுமாம். வீணருக்கு இதை உரைத்தால் கேடு விளையும் என்கிறார். அதுவும் உண்மை தானே?

## சத்துரு மாரணச் சக்கரம்

குறுக்காக ஆறு கோடும் நெடுக்காக ஆறு கோடும் வரைந்தால் இருபத்தியைந்து அறைகள் உருவாகும். ஒவ்வொரு அறையின் பக்கவாட்டுப்பகுதி முனைகளிலும் சூலம் கீறிய பின்னர், குறிப்பட்ட சில எழுத்துக்களை அந்த அறைகளுக்குள் எழுதிட வேண்டுமாம், இந்த சக்கரத்தை ஒரு ஆலமரத்தின் கிழக்குப் பக்கமாகச் செல்லும் கிளையில் முக்கிய சத்துரு பெயரைச் சொல்லி கட்டிவிட்டு மூன்றுநாட்கள் சென்று அதை கழட்டினால் அந்த சத்துரு இறந்து விடுவான் என்கிறார். ஏன் இந்த சக்கரஙக்ளை அகத்தியர் மறைத்து அருளினார் என்பதன் சூட்சுமம் இப்போது புரிகிறதா?

## விலங்கு மாரணச் சக்கரம்

அத்திமரத்து பலகை எடுத்து அதில் குறுக்காக ஐந்து கோடும் நெடுக்காக ஐந்து கோடும் கீறினால் பதினாறு அறைகள் உருவாகும். அந்தக் கோடுகளின் நுனியில் சூலம் கீறிய பின்னர், அந்த அறைகளுக்குள் குறிப்பட்ட சில எழுத்துக்களை எழுதிட வேண்டும்.அந்தப் பலகையை எருக்கம் விறகிட்டு எரித்து அந்த சாம்பலை ஆற்று நீரில் கரைக்க வேண்டும், அப்படி ஆற்று நீரில் கரைக்கும் போது மனதில் நினைக்கும் காட்டு விலங்கானது அந்த நொடியே மாண்டுவிடும் என்கிறார். நகருக்குள் பிரவேசித்து மக்களைத் துன்புறுத்தும் விலங்குகளை இந்த சக்கரம் அழிக்க உனக்கு உதவும் என்றும் கூறுகிறார்.

## காட்டேரிச் சக்கரம்

குறுக்காக ஆறு கோடும் நெடுக்காக ஆறு கோடும் வரைந்தால் இருபத்தியைந்து அறைகள் உருவாகும். ஒவ்வொரு அறையின் பக்கவாட்டுப்பகுதி முனைகளிலும் சூலம் கீறிய பின்னர், குறிப்பட்ட சில எழுத்துக்களை அந்த அறைகளுக்குள் எழுதி பின் அந்த சக்கரத்தை குறிப்பிட்ட பீஜ மந்திரத்தால் ஆயிரத்தி எட்டு தடவைகள் செபித்து அந்த யந்திரத்தை தாயத்தில் போட்டு ஒரு குறிப்பிட்ட நாளில் அணிந்து கொண்டால் காட்டேரி அடிமையாகி ஏவல் புரியும் என்கிறார் அகத்தியர்.

இவ்வாறு விபரீத யந்திரங்கள் பல உண்டு, ஆனால் பிற்கால சந்ததி யினரின் நலன் குறித்து யோசித்த சித்த முனிவர்கள் இதுபோன்ற விபரீதங்கள் விளைவிக்கும் சங்கரங்களின் செய்முறையை மறைத்தனர்.

# காக்கைக்கு உணவிடுங்கள்

## விபத்துக்கள், வீண்பழி, செய்வினைகள் உங்களை அண்டாது

உலகம் முழுவதும் அதிகம் உள்ள பறவைகளில் காகமும் ஒன்று, இதனால்தான் நாம் அனைவரும் அந்தப் பறவையை அலட்சியம் செய்து இருப்போம். ஆனால் ஆச்சர்யப்படும் அளவு அசாத்திய குணங்கள், பல தெய்வ ரகசியங்கள் அதற்கு உண்டு.

மனிதனைவிட உயர்ந்த வாழ்வில் நெறிமுறைகளை கடைபிடிக்கும் பறவை என்பதையும் நம்மில் பலர் அறிந்து இருக்க வாய்ப்பு இல்லை! பல பிரபஞ்ச ரகசியங்களை அறிய, இயற்கையின் பூரண அறிவை பெற இன்று காகங்களை பற்றி பல அபூர்வ சித்த நூல்களில் சொல்லப்பட்ட ரகசியங்களைப் பற்றி பார்ப்போம்.

காகம் ஒரு உயர்ந்த ஒழுக்க நெறி கொண்ட பறவை! கற்புக்கு உதாரணமாக காகத்தை சொல்லலாம். தனது ஜோடியுடன் மட்டுமே இனை சேறும்!

கூச்ச சுபாவம் கொண்டது காகம்!.

பெரும்பாலும் மாலையில் நீர் நிலைகளில் குளித்துவிட்டுதான் தன் கூட்டுக்கு செல்லும் வழக்கம் உடையது காகம்.

உணவை ஒருபோதும் தனியாக சாப்பிட வேண்டும் என்கிற சுயநலம் சிறிதும் இல்லாத பறவை! உணவு கிடைத்தால் தன் சகாக்களையும் அழைத்து பகிர்ந்து சாப்பிடும் சிறந்த குணம் காக்கைக்கு உண்டு.

சிறந்த தாய்! காக்கைக்கு இது தன் முட்டை இல்லை என்று தெரியும்!, தெரிந்தும் குயிலின் முட்டையை அடை காக்கும்!

குயில் குஞ்சுக்கும் தன் குஞ்சு போலவே பறக்கும் வரை உணவளித்து பராமரிக்கும்! "உலகில் மிகச்சிறந்த மாற்றந்தாய் காகம் தான்"!

வள்ளுவர் கூட காகத்தைப் பற்றி அற்புதமாக கூறியுள்ளார்.

தமிழ் வேதமாகிய திருக்குறளில்



"காக்கை கரவா கரைந்துண்ணும் ஆக்கமும்
அன்னநீ ரார்க்கே உள"

–(குறள் 527)

காகம், உணவு கிடைத்தால், அதனை மறைத்துத் தான் மட்டும் உண்ணாது, மற்ற காகங்களையும் அழைத்து உண்ணும். அது போன்றவர்களுக்கே செல்வச் சிறப்பு கிட்டும் என்கிறார் வள்ளுவர்.

தங்கள் இனத்தில் ஏதாவது காக்கை இறந்து விட்டால் அனைத்துக் காக்கைகளும் ஒன்றுகூடி கரையும் தன்மையையும் காணலாம். இது அஞ்சலி செய்வதற்கு சமமாக கருதப்படுகிறது. மனிதனிடம் இருக்கும் பழக்கங்கள்தான் ஆனால் மெல்ல மெல்ல இதை நாமே பெரிது படுத்துவதில்லையோ என்று தோன்றுகிறது.

காகத்திற்கு தினமும் காலையில் சாதம் வைக்கும் பழக்கம் உள்ளவர்களுக்கு பித்ருக்களின் ஆசி பரிபூரணமாக கிடைக்கும்.

காகத்திற்கு தினமும் உணவு அளிக்கும் பழக்கம் உள்ளவர்கள் வாழ்வில், திடீரென்று நடக்கும் அசம்பாவிதங்கள், விபத்துக்கள், வீண்பழி போன்றவை கிட்டவே நெருங்காது.

செய்வினை கோளாறுகள் உங்கள் வீட்டுப் பக்கமே வராது.

தீராத கடன் தொல்லைகள் புத்திர சந் தான பாக்கியம் போன்ற மிக முக்கியமான பலன்களையும், நியாயமான அபிலாஷைகளையும், தங்கு தடையின்றி நிறைவேற்றுவதில் மிக முக்கிய பங்கு வகிப்பது உங்கள் முன்னோர் வழிபாடுதான். உங்கள் முன்னோர்களுக்கே நீங்கள் உணவிடும் புண்ணியம் என்கிற அபரிமிதான சக்தியை அளிக்கவல்ல அற்புதமான ஜீவராசி காக்கை இனம்.

குடும்ப ஒற்றுமை வேண்டும் என்று

www.aanmeegamalar.com

நினைக்கும் சுமங்கலிப்பெண்கள் காக்கைகளை வழிபடுவது வழக்கம்.

உடன் பிறந்தவர்கள் நலமுடன் வாழ, காக்கைக்கு செய்யும் பூஜையை கணுப்பிடி பூஜை என்று அழைப்பார்கள். உடன் பிறந்தவர்கள் ஆரோக்கியமாகவும் மகிழ்ச்சியாகவும் இருக்க, தங்களிடம் பாசம் உள்ளவர்களாகத் திகழ, காக்கைக்கு பெண்கள் கணுப்பிடி பூஜையை செய்கிறார்கள்.

திறந்த வெளியில் தரையைத் தூய்மையாக மெழுகிக் கோலமிடுவார்கள். அங்கே வாழை இலையைப் பரப்பி அதில் வண்ண வண்ண சித்தரான்னங்களை ஐந்து ஏழு ஒன்பது என்ற கணக்கி கைப்பிடி அளவு எடுத்து வைத்து காக்கைகளை கா... கா... என்று அழைப்பார்கள்.

அவர்களின் அழைப்பினை ஏற்று வாழை இலையில் உள்ள அன்னங்களை சுவைக்கும். அப்படி சுவைக்கும்போது அந்த காக்கைகள் கா... கா... என்று கூவி தன் கூட்டத்தினரை அடிக்கடி அழைக்கும்.



அந்தக் காக்கைகள் உணவினைச் சாப்பிட்டு சென்றதும் அந்த வாழை இலையில் பொரி பொட்டுக்கடலை வாழைப்பழங்கள் வெற்றிலைபாக்கு வைத்து தேங்காய் உடைத்து வழிபடுவார்கள்.

இப்படி செய்வதால் உடன் பிறந்த சகோதரர்களுடன் ஒற்றுமை நிலவும் என்பது பெண்களின் நம்பிக்கை. இந்த வழிபாட்டில் வயதான ஆண்களும் கலந்து கொள்வார்கள்.

மறைந்த முன்னோர்கள் காக்கை வடிவில் வந்து வழிபாட்டில் கலந்து கொள்வதாக பெரியவர்கள் சொல்வர். இதனால் பித்ருக்களின் ஆசிகிட்டும் என்பது நம்பிக்கை மேலும் காக்கைகளை அன்று வழிபடுவதால் சனிபகவானைத் திருப்தி படுத்தியதாகவும் கருதுகிறார்கள்.

காக்கை சனி பகவானின் வாகனம் காக்கைகளுக்கு உணவு அளிப்பது சனிக்கு மகிழ்ச்சி தருமாம். காக்கைகளில் நூபூரம் பரிமளம் மணிக்காக்கை அண்டங்காக்கை என சில வகைகள் உண்டு.

காக்கையிடம் உள்ள தந்திரம் வேறு எந்த பறவைகளிடமும் காண முடியாது. எம தர்ம ராஜன் காக்கை வடிவம் எடுத்து மனிதர்கள் வாழுமிடம் சென்று அவர்களின் நிலையை அறிவாராம். அதனால் காக்கைக்கு உணவு அளித்தால் எமன் மகிழ்வாராம்.

எமனும் சனியும் சகோதரர்கள் ஆவார்கள் அதனால் காக்கைக்கு உணவிடுவதால் இருவரும் ஒரே சமயத்தில் திருப்தி அடைவார்களாம். தந்திரமான குணம் கொண்ட காகம் யாராவது விருந்தினர் வருவதாக இருந்தாலும் நல்ல செய்திகள் வருவதாக இருந்தாலும் முன் கூட்டியே காகம் நம் வீட்டின் முன் கா... கா... என்று பல முறை குரல் கொடுக்கும். இந்த பழக்கம் இன்றும் உண்டு.

காலையில் நாம் எழுவதற்கு முன் காக்கையின் சத்தம் கேட்டால் நினைத்த காரியம் வெற்றி பெறும். நமக்கு அருகில் அல்லது வீட்டின் வாசலை நோக்கி கரைந்தால் நல்ல பலன் உண்டு வீடு தேடி காகங்கள் வந்து கரைந்தால் அதற்கு உடனே உணவிட வேண்டும். எனவே காக்கை வழிபாடு செய்வதால் சனி பகவான் எமன் மற்றும் முன்னோர்களின் ஆசீர்வாதத்தினைப் பெற்று மகிழ்வுடன் வாழலாம்.

– சிவசங்கர்








www.aanmeegamalar.com



# வாரத்தில் ஒருநாள் மட்டும் சிவ தரிசனம், பொங்கல் அன்று நாள்முழுவதும் தரிசனம்

பொதுவாக அனைத்து ஆலயம்களும், அதிகாலையில் நடை திறக்கப்பட்டு, ஒரு கால பூஜை, நான்கு கால பூஜைகள், ஆறு கால பூஜைகள் என நடத்துவதுதான் வழக்கம்.

ஆனால் வாரத்தில் திங்கட்கிழமை மட்டும் இரவு நடை திறந்து, நள்ளிரவு 12 மணிக்கு பின்பே சிறப்பு தீபாராதனைகள் நடக்கிறது. பகலில் நடை திறக்கப்படுவதில்லை. எனவே, திங்கட்கிழமை அன்று பக்தர்கள், இங்கே குவிகின்றனர்.

திங்கள்தோறும் இரவில் திறக்கப்படும் இந்த ஆலயம், வருடத்தில் ஒரே ஒரு நாள் மட்டும் பகலில் திறக்கப்படுகிறது; ஆம்! அந்த நாள்.... பொங்கல் திருநாள்!..... தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டையில் இருந்து 11 கிலோமீட்டர் தூரத்தில் உள்ளது பரக்கலக்கோட்டை பொது ஆவுடையார் கோயில்...

தென்னாடுடைய சிவன் தில்லையம்பதியில் நடராஜப் பெருமானாக எழுந்தருளி, அருள் பாலித்து வருகிறார். இவர் சிதம்பரத்தில் அர்த்த ஜாம பூஜையை முடித்துக் கொண்டு, தென்திசை நோக்கி வந்தபோது சோமவார தினத்தில் நள்ளிரவில் வந்தாராம்.

அப்போது, இரண்டு முனிவர்களிடையே நடைபெற்ற இல்லறம் சிறந்ததா? துறவறம் சிறந்ததா? என்ற வழக்கில் தென் சிதம்பரம் என்றழைக்கப்படும் பரக்கலக்கோட்டையில் இல்லறம், துறவறம் இரண்டுமே சிறந்ததுதான் என மத்தியஸ்தம் செய்து ஈசன் வைத்ததால், இங்கு அவருக்கு மத்தியபுரீசுவரர் எனறும், ஈசன் முனிவர்களுக்கிடையே உண்மை பொருளை இங்கு உணர்த்தியதால் பொது ஆவுடையார் என்றும் அழைக்கப்படுகிறார்.

"அய்யனே தாங்கள் இங்கிருந்தபடி பக்தர்களுக்கும் அருள வேண்டும்" என்று முனிவர்கள் வேண்ட, "அப்படியே ஆகட்டும்" என்றார் ஈசன்.

அவரும் அங்கிருந்த வெள்ளால மரத்தி லேயே ஐக்கியமானார். இந்தக் கோயிலில் ஈசன் வெள்ளால மரத்தில் எழுந்தருளி இருப்ப தால், அந்த மரத்தின் இலை பிரசாதமாக கருதப்படுகிறது.

இந்த மரத்தின் இலையை பறித்துச் சென்று, வீட்டு பூஜையறை, பீரோ, பணப் பெட்டி, தானியக் குதிர் ஆகியவற்றில் வைத்து வழிபட வளமான வாழ்வு பெறலாம் என்பது ஐதீகம். மற்ற தலங்களில் லிங்க வடிவில் சந்நிதி கொண்டிருக்கும் ஈசன், இங்கே வெள்ளால மரமாகவே காட்சி தந்து அருள்கிறார்.

முனிவர்களுக்கு கார்த்திகை மாத சோம வாரத்தில் திருக்காட்சி தந்து உபதேசித்ததால், ஒவ்வொரு திங்கட்கிழமையும் இங்கே சிறப்பு பூஜை நடைபெறுகிறது. அதுவும் சிதம்பரத்தில் அர்த்தஜாம பூஜை முடிந்ததும் நடராஜர் அங்கிருந்து இங்கே வந்ததால், ஒவ்வொரு திங்கட்கிழமையும் இங்கு இரவு 10.30 மணிக்கு நடை திறக்கப்பட்டு, நள்ளிரவு 12 மணிக்கு பூஜைகள் நடைபெறுகிறது. நள்ளிரவு 12 மணிக்கு பின்பே சிறப்பு தீபாராதனைகள் நடக்கிறது..

அன்பன்.சிவ.அ.விஜய் பெரியசுவாமி,
கல்பாக்கம்: 09787443462

ஆன்மிகமலர்.காம்
www.aanmeegamalar.com
புத்தம் புதிய ஆன்மீக செய்திகளை தினமும் படியுங்கள்
• ஆன்மிகம் • தத்துவம் • உடல்நலம் • பலன்கள்


ஆன்மிகமலர் மெயில் புக்

# மனிதனின் நல்ல மற்றும் தீய செயல்கள் பூமியின் சம நிலைகளை பாதிக்கின்றன

குருதேவர் கூறுகிறார்: உலகத்தின் பகுதி அளவான பிரளயம் பொதுவாக மனிதர்களுடைய தீயச் செயல்களினால் ஏற்படுகிறது. நாம் அனை வரும் வெடிகுண்டுகளுடன் சண்டையிடத் துவங் கினால், இந்த நேரடியான செயலின் மூலமாக நாம் மனித இனத்தின் விஸ்தீரணத்தைத் தீவிர மாகக் குறைத்துவிட முடியும். மேலும் நாம் போதுமான அளவு கடினமாக உழைத்தால், ஒருவேளை நாம் இந்த உலகத்தையே அழித்துவிடக்கூட முடியும்! இறைவன் மனிதனுக்கு அழிக்கும் ஆற்றலையும், படைக்கும் ஆற்றலையும் அளித்துள்ளான்.

நாம் உலகத்தை அழகாக ஆக்கியுள்ளோம். மேலும் நாம் அதை அழிக்கும் சக்தியையும் பெற்றிருக்கிறோம். நாம் உலகத்தின் தூய்மையைக் குலைக்கும் பொழுது, சுற்றுச் சூழலானது ஒரு தீவிர மாற்றத்திற்கு ஆளாகிறது.

இதுவே பகுதியளவான பிரளயம் எனப்படு கிறது. அத்தகைய பொங்குதல்கள் அனேக தடவைகள் நிகழ்ந்துள்ளன. நோவாவின் வெள்ளம் ஓர் உதாரணமாகும். இந்தப் பகுதியள வான பிரளயங்கள் மனித இனத்தின் தவறான செயல்கள், அறியாமையினால் எழும் தவறுகள் ஆகியவற்றினால் விளைகின்றன.

இந்த உலக சம்பவங்கள் இறைவனுக்குத் தெரியாமல் தாமாகவே நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என எண்ண வேண்டாம். மேலும் மனிதனின் செயல்கள் இறைவனுடைய பிரபஞ்ச விதிமுறைகளின் இயக்கத்தின்மீது எந்த விளைவையும் ஏற்படுத்துவதில்லை என எண்ணாதீர்கள். யுக யுகங்களாக நிகழ்ந்து வந்துள்ள அனைத்தும் வான்வெளியில் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. மனித இனம் வான் வெளியில் விட்டுச்செல்கின்ற தீய அதிர்வுகள் பூமியின் இயல்பான இணக்கத்தின் சமநிலையை நிலை குலைவிக்கின்றன. நோயினாலும் தீமையினாலும் பூமி மிகுந்த பாரமாகும்பொழுது இந்த வான்வெளி நிலைகுலைவு களானவை நிலநடுக்கங்கள், வெள்ளங்கள், பிற இயற்கைப் பேரழிவுகள் ஆகியவற்றிற்கு உலகம் இடம் கொடுப்பதற்குக் காரணமாகின்றன.”

“ நீங்கள் ஒரு நீண்ட காலத்திற்கு தவறாக வாழும்பொழுதும் இதுபோலவேதான்; பல்வேறு இணக்கமின்மைகளும் குறிப்பிட்ட நோய்களும் உங்களுடைய உடலில் வெளிப்படத் துவங்குகின்றன. நோய் ஒரு தண்டனை அல்ல. அது நீங்கள் உங்களுக்கேஉடலில் உருவாக்கிக் கொள்ளும் ஒரு நஞ்சாகும். மேலும் நீங்கள் அதை நீக்கி ஒழித்திட வேண்டும் என இறைவன் விரும் புகிறான். ஆனால் பெரும்பாலும் நீங்கள் அந்த நஞ்சை விலக்க முயற்சி செய்யும் முன்னரே தேகம் முற்றிலுமாக



74
பாகம்
பரமஹம்ஸ யோகானந்தர் அருளிய வழிமுறைகள்
மனித வாழ்வு
மேம்படுவதற்காக

சீர்கேடடைந்து நீங்கள் இறந்து விடுவீர்கள். ஆகவே, மனித உடலைப் போலவே, பூமியும் இணக்கமின்மைகளினாலும் நோயினாலும் துன்புறுகிறது.

மேலும் இதன் காரணம், உலகம் முழுவதுமுள்ள அனைத்து மக்களின் ஒன்றுசேர்ந்த செயல்கள் நாம் வாழுகின்ற கிரகத்தை பாதிப்பதுதான். அதைப்பற்றி சந்தேகமேயில்லை. மனிதனால் உருவாக்கப்பட்ட நல்ல மற்றும் தீய கர்மவினை நிலைமைகள் தட்ப வெட்ப நிலையை தீர்மானிக்கின்றன மற்றும் பாதிக்கின்றன. அவை காற்றையும் சமுத்திரத்தையும் பாதிக்கின்றன. சில சமயங்களில் நிலநடுக்கங்களையும் உண்டாக்கி பூமியின் கட்டமைப்பையேகூட மாற்றுகின்றன. நாம் உலகத்தினுன் செலுத்தும் வெறுப்பு கோபம் தீமை ஆகிய அனைத்தும் கடும் வேதனையையும் எதிர்ப்பையும் விளைவித்து பூமியின் காந்த சக்தியை நிலைகுலைய வைக்கின்றன வான்வெளியிலுள்ள இரைச்சலைப் போன்று. இந்த யுத்தத்தினால் விளைவிக்கப்பட்ட அழிவில் நாம் உலகத்தின் ஒரு பகுதியளவான பிரளயத்தைக் காண்கிறோம். உயிர்கள், செல்வம், வாழ்விடங்கள் ஆகியவற்றின் நாசம். பல வழிகளில் இது நோவாவின் வெள்ளத்தைவிட மோசமானது; அது நெருப்பு, சிந்தப்பட்ட இரத்தம் ஆகியவற்றின் வெள்ளமாகும். ஆனால் ஒரு விஷயம் ஊக்கமளிக்கிறது. மனித இனத்தின் நல்வினை , தீவினையைவிட மிகவும் அதிகம். இது இவ்வாறு இல்லாமல் இருந்திருந்தால், பூமியானது எதிர்மறை அதிர்வுகளினால் வெடித்திருக்கும். தோற்றமளிப்பவற்றிற்கு முரணாக பூமியானது ஓர் ஏறுமுகமான சுழற்சியில் உள்ளது. மேலும் நன்மையே வெல்லும்.

பூமியின் வாழ்க்கை சுழற்சிகள்.

குருதேவர் மேலும் தொடர்கிறார்; “ஒரு விதத்தில் உலகமானது முன் கூட்டியே தீர்மானிக்கப்பட்ட வயதுடன்கூடிய வாழும் உயிரினமாகும். நாம் இந்த மாபெரும் பூமித்தாயின் குழந்தைகள். அவள் விளைவிக்கின்ற உணவை உண்ணுவதற்காக அவளது மார்பகத்திலிருந்து நாம் பால் அருந்துகிறோம். அவள் தனது வளிமண்டலத்திலுள்ள பிராணவாயு சுற்றோட்டங்கள், சூரிய ஒளி, நீர் ஆகியவற்றின் வாயிலாக நம்மை பேணிவளர்க்கவும் செய்கிறாள். நாம் இளமை, நடுவயது, முதுமை, மரணம் மற்றும் மறுபிறவி ஆகியவற்றினூடாக செல்வதைப் போலவே பூமித்தாயும் செல்கிறாள். இளம் பூமித்தாய் நடுத்தர வயதுடைய பூமித்தாய் முதுமையடைந்த பூமித்தாய் என உள்ளன. பின்னர் மனிதர்களுக்கு அவர்களுடைய கர்மவினையைத் தீர்ப்பதற்கு புதிய வலிமை, ஒரு புதிய வாழ்விடம் ஆகியவற்றைக் கொடுப்பதற்காக பூமியானது பகுதியளவு


ஆன்மிகமலர் மெயில் புக்

பிரளயத்தினால் ‘இறந்து’ மீண்டும் மறுபிறவி எடுக்கிறது. பல தடவைகள் பூமியானது பகுதி அளவான பிரளயம் மற்றும் மறுபிறவிக்கு ஆளாகி உள்ளது. ஆனால் பூமிக்கு முழுமையான மரணம் என்பது அது இறைவனிடம் மீண்டும் கரைந்து மறையும்போது மட்டுமே நிகழும். “

“நான் பூமியின் வாழ்க்கை சுழற்சிகளைபற்றி சுருக்கமாக விளக்குகிறேன். இந்தச் சுழற்சிகள் நான் யுகங்கள் அல்லது காலங்களை உள்ளடக்கிய 24,000 ஆண்டுகளைக் கொண்டவை.

இந்த யுகங்களினூடே அதிகரிக்கும் ஞான ஒளியை நோக்கி மேற்செல்லும் 12,000 ஆண்டுகள் மற்றும் அதிகரிக்கும் அறியாமையையும் லோகாயதத்தையும் நோக்கி கீழ்செல்லும் 12,000 ஆண்டுகள் ஒவ்வோர் அரைசுழற்சியும் ஒரு தெய்வயுகம் என்றழைக்கப்படுகின்றது.

படைப்பின் தொடக்கம் முதற்கொண்டு பூமி ஏற்கனவே பல முழு சுழற்சிகளினூடே கடந்து வந்துள்ளது. ஒவ்வொரு தெய்வயுகத்தின் நான்கு காலங்கள் கலியுகம் இருண்ட அல்லது லோகாயத காலம்; துவாபரயுகம், மின் அல்லது அணுகாலம். திரேதாயுகம் மனோகாலம்; சத்திய யுகம் மெய்யறிவு அல்லது ஞான ஒளிக்காலம்.

குருதேவர் கூறியுள்ள பூமியின் வாழ்க்கை சுழற்சிகளைப்பற்றிப் பார்த்தோம். ஒரு குடும்பத்தின் சுழற்சி எவ்வாறுள்ளதோ அதே போன்றுதான் பூமிக்கும் உள்ளது என்பதை குருதேவர் நமக்குக் கூறியுள்ளார். ஒரு குடும்பத்தில், தாயும் தந்தையும் குழந்தைகளை பேணுவதுபோன்று, குழந்தைகள் வளர்ந்தபின்னர் தாயையும் தந்தையையும் பேணிப்பாதுகாக்க வேண்டும்.

அதுதான் தர்மம். அதேபோன்று பூமியின் குழந்தைகளான மனிதர்கள் பூமியையும் பாதுகாக்கவேண்டும். பூமி நம் தாய் அல்லவா! பெற்ற தாயை அடித்துத் துன்புறுத்தினாலோ அல்லது வேறு விதத்தில் கொடுமைகள் இழைத்தாலோ அந்தத் தாய் தாங்கமாட்டாள் அல்லவா! அது மகாபாவமும்கூட. இந்தக் காலத்தில் தாயை கொலை செய்கின்றனர்.

அது எவ்வளவு பெரிய பாவம் என்று தெரியாமல் செய்கின்றனர். அதுபோலவே மனிதர்கள் பரஸ்பரம் செய்கின்ற தம் கொடிய தீயச் செயல்களினால் தாயாகின்ற பூமி பாதிக்கப்படுகிறது. அதனால் அழிவு நிகழ்கிறது.

அன்பு குருதேவர் கூறுவதைப் பார்க்கும்போது, சத்தியம், தர்மம் ஆகியவற்றைக் கடைபிடித்து வாழுகின்றவர்களுக்கு அச்சம்தான் ஏற்படும். சத்திய, தர்ம, நீதி, நியாயங்களைக் கடைபிடிப்பவர்கள் பயப்படவேண்டிய அவசியமில்லை.

இருப்பினும் மனித இனத்தை அழிக்கின்ற வகையிலான இதயம் படைத்துள்ளவர்கள் இப்புவியில் வாழும் காலம்வரை மனிதன் பயந்துதான் வாழவேண்டும். தர்மத்தையும் சத்தியத்தையும் இறைவனாகக் கருதி வாழுபவர்கள் பயப்படத்தேவையில்லை.

கொடூரமான நிகழ்வுகள் நிகழ்வதைக் கண்டு அச்சம் கொள்ளாமலிருக்க ஒரே ஒரு வழிதான் உள்ளது. அது என்னவென்றால் இறைவனை உணர்தலாகும். இறைவனுக்கு முன்னுரிமை தந்து அவனுக்காக நேரம் ஒதுக்கி தினமும் தியானம் செய்பவர்கள் எதற்கும் பயப்படத்தேவையில்லை.

இவ்வாறு தியானம் செய்து இறைவனை சொந்தமாக்கிக்கொள்ளும் மனிதர்களுடன் இறைவன் இருப்பான். மனிதன், தனக்கு விதிக்கப்பட்ட கர்மங்களை சரியாகச் செய்வதே அவனுடைய கடமையாகும். மனிதனாகப் பிறந்தவர்கள் அனைவருக்கும் தியானத்தால் இறைவனைத் தேடிக் கண்டுபிடிக்கின்றகடமை உண்டு. இக்காலகட்டத்தில் மனிதன்தன்னுடைய கடமைகளை கடமையாக நினைப் பதில்லை.

இஷ்டம்போல் அவனுக்கு என்னதோன்றுகிறதோ அதைச்செய்வதே கடமையாக எண்ணுகிறான். நன்மை, தீமை, பாவம், புண்ணியம் எதுவும் தெரியாமல், அறியாமையினாலேயே பல்வேறு தவறுகளைச் செய்துகொள்கின்றனர். அதனால் உலக மக்கள் பாதிப்படைகின்றனர். ஒவ்வொருவரும் தமக்கு விதிக்கப்பட்டுள்ள கடமைகளை முறையாகவும் சரியாகவும் செய்வதே சாலச்சிறந்தது. அப்படிச் செய்தால் அதன் பலன் என்ன என்பதை பகவத் கீதையில் பகவான் கிருஷ்ணன் அருளுகிறார்:

யத்ருச்சயா சோபபன்னம்
ஸ்வர்க்கத்வாரமபாவ்ருதம்
ஸுகின: க்ஷத்ரியா: பார்த்த லபந்தே
யுத்தமீத்ருசம்.

“ஹே, அர்ஜுனா! தன் தர்மத்தை தவறின்றிச் செய்வது சுவர்க்கானுபூதிக்குக் காரணமாகிறது, தர்மத்தைத் தேடி அறிந்தும் மிகவும் பிரயத்னப்பட்டும்கூட நிறைவேற்றவேண்டும். ஆனால் அதைத் தேடாமலும் முயற்சிக்காமலும் தனக்குக் கிடைத்த தர்மத்தை ஒருவன் அகங்காரத்தினால் நிராகரிக்கிறான் என்றால், அவனுக்காகத் திறந்துவைத்துள்ள சுவர்க்க வாசலை தாமே மூடுகிறான் எனப் பொருளாகிறது பாக்கியசாலிகளான க்ஷத்திரியர்களுக்குத்தான் இவ்வாறு எதிர்பாராமல் தர்மத்தைச் செய்வதற்கான வாய்ப்பு கிடைக்கிறது.



தேடாமலே தன்பக்கம் வந்துள்ளதுதான் இந்தப்போர், அது முற்றிலும் தர்மமுமாகின்றது. எனவே இந்தப் போரினால் உனக்கு ஒரு பெரிய தர்மம் நிறைவேறியது என்று திருப்தி அடையலாம். இந்தப் போரினை நிராகரித்தால் ஒரு பெரிய தர்மத்தை நீ நிராகரித்ததன் பலனாக நீ பச்சாத்தபிக்க வேண்டிவரும்”.

(பகவத் கீதா அத்.2 ஸ்லோகம் 32)

இவ்வாறு தற்போதைய காலகட்டத்தில் பெரும்பாலானோர்களும் தாம் செய்யவேண்டிய தர்ம காரியத்தைச் செய்யாமல் அதற்கு மாறான அதர்மங்கள் பலவற்றைச் செய்து கொண்டிருக்கின்றதை நாம் எல்லாரும் பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

அதனால்தான் அதன் விளைவாக பல்வேறு விதமான அழிவும் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. அவ்வப்போது நிகழ்ந்துகொண்டிருக்கின்ற அழிவை எவ்வாறு நிறுத்த முடியும்? மனிதர்கள் அனைவரும் நல்லெண்ணத்துடனும் ஒற்றுமையுடனும் வாழவேண்டும். இறைவனைத் தொடர்பு கொள்ள முயற்சி செய்ய வேண்டும்.

பின்னர் இறைவன் காட்டும் வழியில்செல்ல வேண்டும். இறைவனைச் சரணடைந்துஇறை வழிகாட்டுதலில் வாழ்ந்தால் எந்தத் தீங்கும் யாருக்கும் விளையாது. தர்மத்தைக் கடைபிடித்து வாழ்ந்தால் தர்மம் அனைவரையும் காக்கும், அனைத்தையும் காக்கும்.

இன்றைய உலகம் அதர்மத்திலே வாழுகின்றது. அதன் விளைவு எப்படிப்பட்டதாக இருக்கும்? ‘நெருப்பு’ தான் அதன் விளைவு. மனிதன் தன் கையாலே நெருப்பு அள்ளி வீசுகிறான். அந்த நெருப்பு, உலகம் முழுவதும் பற்றி எரிகிறது. தர்மத்தைக் காத்து வாழுகின்ற மனிதர்கள் மட்டும் எந்த தீங்கும் தொடாமல் வாழுவர்.

தர்மம் அவர்களைக் காக்கின்றது. இக்கால மக்கள் மனித இதயத்துடன் உள்ளவர்களானால் அவர்களுக்கு, பிறருடைய வலியையும் மன உளைச்சலையும் அறிய முடியும்.

அதில்லாமல் விலங்குகளின் இதயம் உள்ள மனிதர்களுக்கு பிறருடைய வேதனை தெரியாது. அதனால்தான் இன்றைய உலகம் ஆங்காங்கே அழிந்து கொண்டிருக்கிறது. தர்மம் குறைந்து அதர்மம் பெருகும்போது அழிவும் இடைவிடாமல் நிகழ்ந்துகொண்டேயிருக்கும்.

அமைதியான வாழ்வு, மற்றும் மகிழ்ச்சியான வாழ்வு வேண்டுமென்றால் நல்ல இதயமும் இறைத் தொடர்பும் ஏற்படவேண்டும். இறைவன் இருக்குமிடத்தில் எவ்வித பயமும் இல்லை.

அவரவர்கள் தங்களுடைய பணிகளை, விவேகத்துடனும் தர்மத்தை பாதுகாக்கும்படியும் செய்துகொண்டால் எல்லாம் சரியாக நடக்கும். இல்லையேல் மனிதனின் தீயச் செயல்கள் பூமியின் இணக்கமான சமநிலைகளை பாதிக்கின்றன.

மீண்டும் மலரும்... குருப்ரியா (வசுமதி)
சர்பதிவாளர் (ஓய்வு) Cell No.9894595909

# அஞ்ஜனம்



என்னிடம் அடிக்கடி ஒரு இளைஞன் வருவான், வறுமையான சூழலில் அவன் பிறந்திருந்தாலும் வறுமையை கொஞ்சம் கூட வெளிக்காட்டாத அவன் பேச்சுத் தோரணை எனக்கு ரொம்ப பிடிக்கும், எவ்வளவு பெரிய கஷ்டமான வேலை அவனிடம் சொன்னாலும் முகம் சுளிக்காமல் எத்தகைய சிரமத்தையும் தாண்டி அந்த வேலையை முடித்து விடுவான்,

ஒருநாள் அவனிடம் நான் தனியாக பேச நேரிட்டது, அப்போது தான் அவன் மனதுக்குள் கிடந்த அத்தனை ஆசை. அபிலாஷைகளை என்னிடம் கொட்டித் தீர்த்தான், தான் கிராமத்தலையாரியின் மகன் என்பதையும். தனக்கு மிகச்சிறிய வயதிலேயே திருமணம் ஆகிவிட்டது என்பதையும் என்னிடம் சொல்லி நான் எப்படியும் அரசியலில் பெரிய தலைவராக ஆக வேண்டும் என்றும் அதற்கு நான் உதவி செய்ய வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டான்,

அவன் ஜாதகம் உட்பட அனைத்தையும் நான் பரிசோதித்து பார்த்தேன், அவன் அரசியல் தலைவராவதற்கான எந்தவித சாத்தியக்கூறும் இல்லையென்பதை தெளிவாக புரிந்து கொண்டேன், இருப்பினும் சில பொதுவேலைகளில் அவன் காட்டிய சிரமத்தையும். தாங்கிக் கொண்ட துயரமும் அவனுக்கு எந்த வகையிலாவது உதவி செய்ய வேண்டும் என்ற எண்ணம் எனக்குள் மிக ஆழமாக வேர் விட்டு விட்டது,

அந்த நேரத்தில் பஞ்சாயத்து தேர்தல் அறிவிப்பும் வந்தது, அந்த இளைஞனை அழைத்து ஒரு வசிய அஞ்ஜன தாயத்தை கட்டிக்கொள்ள கொடுத்தேன், ஒரு குறிப்பிட்ட கட்சியின் பெயரைச்சொல்லி அந்தக் கட்சியின் மாவட்ட பொறுப்பிலிருப்பவரை போய் பார், கட்சியில் சீட்டு கிடைக்கும். தேர்தலிலும் வெற்றி பெறுவாய், ஆனால் மிகக்கடினமாய் உழைப்பு இருக்கும் என்று ஆசிர்வதித்து அவனை அனுப்பி வைத்தேன், அவன் மீண்டும் என்னை வந்து பார்த்தபோது ஒன்றியக் கவுன்சிலராக தான் தேர்ந்தெடுக்கப்பட்ட வெற்றிச்செய்தியுடன் வந்தான், அப்பொழுதுதான் அஞ்ஜனங்களுக்கு இருக்கின்ற முழு சக்தியை நான் உணர்ந்து கொண்டேன், குடும்பத்திலோ. அரசியலிலோ. பொருளாதார பலத்திலோ. ஏன்? ஜாதக அமைப்பிலும் கூட எந்த விதமான பின்பலமும் இல்லாமல் வெறும் மந்திரம். அஞ்ஜனம் இவைகளால் ஒரு நரியையும் பரியாக்கிவிடலாம் என்ற ஆண்டவனின் அனுக்கிரக சக்தியை எண்ணி வியக்காமல் என்ன செய்ய முடியும்,

அப்படி அந்த இளைஞனுக்கு என்ன அஞ்ஜனம் கொடுத்தேன் என்று நீங்கள் கேட்பது எனக்கு புரிகிறது, அவனுக்கு நான் கொடுத்தது ஸ்ரீ மகாலஷ்மி அஞ்ஜன மாகும்,



இந்த மகா லாஷ்மி அஞ்ஜனம் நம்மை சகல கிரக தோஷ உபாதையிலிருந்தும் விடு வித்து இஷ்ட சித்தி ஏற்படுத்தித்தரும், மேலும் தொழில் மேன்மை. தனசமர்த்தி. புகழ். பதவி. அனுகூலம். வியாபாரம். உத்தியோகம்ஆகிய எல்லாத்துறைகளாலும் தனலாபத்தையும். மன ஆசைகளையும் மிக சுலபமாக நாம் அடைய வழிவகை செய்யும், துர்மரணம். தீய ஆவிகளின் தொல்லை. செய்வினை தோஷம். முன்னோர்களின் சாபம். கர்ம வியாதி ஆகிய சகலமும் இந்த அஞ்ஜனத்தால் தீரும்.




இதில் உள்ள மகாவிஜயதன ஆகர்ஷன மூலிகையின் மகிமை பணம். பதவி ஆகியவற்றை ஈர்த்துத்தர வல்லது, இதை எந்த வயதினரும் எந்த பாலினரும். எந்த மதத்தினரும் உபயோகப்படுத்தலாம்,

இந்த அஞ்ஜனம் செய்ய கரும் துளசி. வேர். நீர். சாம்பிராணி இலை. வெண் தாமரைக்கொடி. சந்தன இலை. அதிமதுரவேர் ஆகிய ஐந்து பொருட்கஷளுயம் சமபங்காக எடுத்துக்கொண்டு

"ஹ்ரீ ஓம் மகா தேவீ மகா
லட்சுமி சர்வ மங்கள
பிரதயினி மம பிரயத்தன
காரிய சித்தி"

என்ற மந்திரத்தை1008 தடவை பௌர்ணமி தினம் சந்திரோதய சமயம் கிழக்கு முகமாக உட்கார்ந்து ஜபம் செய்து பின் மேற்படி குறிப்பிட்ட ஐந்து பொருட்களையும் புது மண்சட்டியில் அத்திமர சமித்தால் நெருப்பு ஏற்படுத்தி ஒவ்வொரு பொருளாக போட்டு கரியாக்கி நன்றாக தூள் செய்து தனியாக எடுத்துக் கொண்டு பசு நெய்யில் கலந்து வெண்ணைபோல் உருட்டிக்கொள்ள வேண்டும்,

பின்பு சாம்பிராணி எண்ணெய். சந்தன எண்ணெய். அசல் வேப்பம் எண்ணெய். கடுகு எண்ணெய். வசம்பு எண்ணெய் ஆகிய ஐந்து எண்ணெய்களை சமமாக கலந்து முன் சொன்ன மூலிகை சாம்பல் உருண்டையை கொட்டி கலந்து வெள்ளி அல்லது பீங்கான் கிண்ணியில் அடைத்து வைத்துக்கொள்ள வேண்டும், பின்னர்

www.aanmeegamalar.com



www.aanmeegamalar.com

"ஹரி ஓம் மாக தேவீ
மகா லட்சுமி ஓம் ஸ்ரீம் க்லீம்
ஹரீம் ஸ்ரீம் ஆகச்சா
ஆகச்சா
மம மந்திரே திருஷ்டத்
திருஷ்டத் ஸ்வாஹா"

என்ற மூல மந்திரத்தை நாற்பத்தெட்டு தினங்கள் சந்தியாவந்தன நேரத்தில் வடக்கு முகமாக உட்கார்ந்து தினசரி 2016 தடவைகள் ஜபம் செய்து அஞ்ஜனத்தில் ஊதிவிடவும் இதேபோல் நாற்பத்தெட்டு நாள் செய்து நாற்பத் தொன்பதாம் நாள் ஐந்து அம்மன் கோவில் சென்று அம்மனை தரிசனம் செய்து பின்னர் அஞ்ஜனத்தை உபயோகப்படுத்திக் கொள்ளலாம்,

இதேபோன்று சரஸ்வதி அஞ்ஜனம் என்று ஒன்று உள்ளது, இதை மை போலவும் உப யோகம் செய்யலாம், சாம்பிராணி போல் தூபம் போட்டு வாசனையும் பிடிக்கலாம், இதனால் ஞாபகமறதி. சபைக்கூச்சம். திக்குவாய். படிப்பில் ஊக்கமின்மை. தொழில் சிறத்தையின்மை. குரல் வியாதிகள் விலகும்,

இது செய்ய தேவையான பொருட்கள் கருந் துளசி வேர். ஜாண்டு காய்கள். நெறிஞ்சி முள். வாலாட்டி மர இலை. வேப்பம்பழம். யானை வணங்கி வேர். பலாவேர். தொட்டாசுருங்கி வேர். மாதுரை இலை. கருவேம்புச்சாறு. சீந்தல் கொடி. நன்னாரித்தூள். விஷ்ணுகிரந்தி இலை. சிவகிரந்தி இலை. பிரம்ம பத்திரம்.

வாதநாராயணப்பட்டை. மருதம்பட்டை.சீகத் துக்காய்தூள். இலவஞ்சிக்கொடி.கடலைச் செடியின் வேர் ஆகிய இருபது மூலிகைகளையும் நிழலில் தனித்தனியாக உலர்த்தி சமஎடை எடுத்து இடித்து நன்றாக தூள் செய்து விபூதி பக்குவமாக்கி அத்துடன் இருநூறு கிராம் கற்பூரத்தை பொடி செய்து பசங் கன்று குட்டியின் சாணத்தில் பிசைந்து அத னுள் மேற்படி மூலிகைப் பொருட்களை கொழுக் கட்டையில் பூரணம் வைப்பது போல் வைத்து உருட்டி ஒன்பது நாட்கள் வெயிலில் காயவைத்து வைத்துக்கொள்ள வேண்டும்,



10 ஆம் நாள் சரஸ்வதியை தியானித்து காயவைத்து சாணி உருண்டைகளை எடுத்து ஒரு அகலமான பானை ஓட்டில் வைத்து கற்பூரம் சந்தனக்குச்சிகளைக் கொண்டு நெருப்பிலிட்டு அசல் விபூதியைப்போல் ஆக்கிக் கொள்ளவேண்டும், இந்த விபூதியை 1/4 கிலோ சாம்பிராணி எண்ணெயில் கலந்து கிளறி அத்துடன் ஜவ்வாது. கஸ்தூரி. குங்குமப்பூ. சந்தன எண்ணெய் இவைகளை விட்டு பிசைந்து அஞ்ஜனமாக்கிக் கொள்ள வேண்டும், பின்னர்.

"ஹரி ஓம் ஐம் வேதகாரோ
மந்த்ரகாரோ வித்வாந் ஸமர
மர்தந மஹா மோக நிவாஸீ
ச மஹாகோரோ வசீகர"

என்ற மூல மந்திரத்தை தினசரி 82 வீதம் 82 நாளைக்கு சொல்லி அஞ்சனத்தில் ஊதிவிட வேண்டும், அதன்பிறகு புருவங்களுக்கு மத்தியில் இந்த அஞ்ஜனத்தை பொட்டாக இட்டுக் கொண்டாலே நினைவு ஆற்றல் பெருகும், சரஸ்தி தேவியின் பரிபூரண கிருபையால் அபாரமான அறிவு ஒளி வீசும்,

இப்படி மஹா நிவர்த்தி அஞ்ஜனம். சர்ப அஞ் ஜனம். பாலாரிஷ். தோஷ நிவாரண அஞ்ஜனம். சுதர்சன அஞ்ஜனம். வசீகர அஞ்ஜனம். குபேர அஞ்சனம். சர்வசிய அஞ்சனம். அஷ்டமாசித்து மகா அஞ்சனம். பாதாள மூலி அஞ்ஜனம். ஜெயமங்கள் அஞ்ஜனம் போன்று கணக்கிடலங்கா எத்தனையோ அஞ்ஜனங்களை ஏடுகளிலும். பல மகான்களின் அனுபவ அறிவுக்களஞ் சியங்களிலும் தெரிந்தும். தெரியாமலும் மறைந்து கிடக்கின்றன, அவைகளை எல்லாம் வெளிக்கொண்டு வந்து பாதிக்கப்பட்ட மக்களின் துயரங்களை துடைத்து நல்ல வாழ்க்கையை நாம் கொடுக்கலாம், ஆனால் இன்று நிலைமை என்ன?

யோகி ஸ்ரீ ராமானந்த குரு
மேலும் தொடர்பு கொள்ளவும்
போன்: 09442426434



வாருங்கள் எங்களுடன் பயணிக்க...

உலக அளவில் இமெயில் மூலம் இலவச இதழாக வெளிவரும் நமது இதழில் ஆன்மிக நாட்டமும் விருப்பமும் உள்ள அன்பர்கள் வரவேற்கப்படுகிறார்கள்.

உங்களுக்கு தெரிந்த திருக்கோயில்கள், மகான்கள், சித்தர்கள், இந்துமத சடங்கு-சம்பிரதாயம் போன்றவற்றை

(உங்களது பெயர், முகவரி, தொ.பே.எண்ணுடன்)

எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். நமது வாசகர்கள் பயன்படுத்த பிரசுரிப்போம்.

தெரியாதவர் தெரிந்து கொள்ள எங்கள் பயணத்தில் நீங்களும் இணைந்து பயணியுங்கள்

மேலும் தொடர்பு கொள்ள:

தொடர்பு எண், வாட்சப் எண்

8825844033

# பழனி முருகன் அன்னதான குடில் 2020

நான் தைப்பூசத்தையொட்டி சில ஆண்டு களாகப் பழனிக்குப் பாதயாத்திரை சென்று வரும் பக்தன். கடந்த ஆண்டு நான் பாதயாத்திரை சென்ற போது ஏற்பட்ட அனுபவத்தை எழுத எண்ணி இருந்தேன்.

கடந்த மாதம் கடைசியில் வெளிவந்த ஆன்மீக மலரில் பழனி முருகன் அன்னதான குடில் பற்றி தகவல் வெளியாகியிருந்தது அதைப் பார்த்ததும் எனக்கு இந்த நல்ல அனுபவத்தை எழுதத் தோன்றியது. இதற்கு ஆன்மீக மலருக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

கடந்தாண்டு குன்றக்குடியிலிருந்து பழனிக் குப் பாதயாத்திரை செல்கையில் ஜனவரி 17ம் தேதி மாலை 6 மணிக்குத் திண்டுக்கல் அருகே வந்தபோது பழனி ரோடு அருகே பழனி முருகன் அன்னதான குடில் என்று பந்தல் அமைத்து பக்தர்களுக்கு அன்னதானம் அளித்தனர்.சுடச்சுட இட்லி ஊத்தப்பம் என வீட்டுச் சாப்பாடு போல இருந்தது. அருகே இருந்த ஏற்பாட்டாளர்கள் எங்களிடம் இதேபோன்று சாப்பாடு ஒட்டன்சத்திரம் அருகே நாளையும் (18 ), 19ஆம் தேதியும் வழங்கப்பட உள்ளதாகக் கூறினர்

இதைக் கேட்டு மகிழ்ச்சி அடைந்த நாங்கள் எங்களுக்கு அரை நாள் முன்னதாக சென்ற நண்பர்களுக்கு இந்தத் தகவலைத் தெரிவித்து பழனி முருகனுக்குச் செல்லும்படி கூறினோம். நாங்கள் 19ஆம் தேதி காலை தான் அந்த செல்லமுடியும் எனக்கருதி நண்பர்களுக்கு முன்னமே செல்லுமாறுக் கூறினோம் நல்ல சாப்பாடு கிடைத்தால் மகிழ்ச்சி தானே !!

நாங்கள் சொன்னதைக் கேட்டு அங்குச் சென்று அன்னதானத்தை ருசித்த நண்பர்கள்

"அப்பா நல்லா சொன்னிங்க உண்மையி லேயே நல்ல சாப்பாடு. நாளை (19) பழநி முருகன் அன்னதான குடிலுக்கு வாங்கப்பா மனது திருப்தியா சாப்பிடுங்கப்பா அப்படியே எல்லோருக்கும் சொல்லுங்கப்பா " என்று அன்ன தானத்தின் சிறப்பையும் , இசைக் கச்சேரியில் லயித்ததை வர்ணித்தனர்

இதைக் கேட்டு மிகுந்த எதிர்பார்ப்புடன் மறுநாள் நான் பழனி முருகன் அன்னதான குடிலுக்கு அதிகாலை வந்தடைந்தேன். அப்பொழுது மகா வேல் பூஜைகான ஏற்பாடுகள் நடந்துகொண்டிருந்தது. அதே வேலையில் சுடச்சுட பில்டர் காபி வழங்கிக் கொண்டு இருந்தார்கள். என்ன மனம் என்ன சுவை மற்றும் வேல் மாறல் பாராயணம் தொடங்க ஆயத்தம் நடைபெற்றுக் கொண்டு இருந்தது நான். பக்தி உணர்வுடன் இறை உணர்வுடன் குடிலின் பூஜையில் பங்குபெறச் சென்றேன் .ஆயிரம் ஆண்டுகள் முன்பு தொடங்கப்பட்ட ஒரு குடிலுக்கு நுழைந்தது போல் நவீன கட்டிடத்திலிருந்தேன் ஆஹா ஆஹா !! மலர் தோரணங்கள் என்ன!! மலர்களின் மனம் என்ன!! ராஜா அலங்கார முருகன் என்ன !! ராஜ அலங்கார குடி கொண்ட ஒரு சிறிய தேர் என்ன !!. நேர்த்தியான குடில் அமைப்பு என்ன!! சிறப்புகளை அடுக்கிக் கொண்டே போகலாம். அப்பப்பா. அனு பவித்தால்தான் தெரியும்.

மகாவேல் பூஜைக்கு பஞ்சாமிர்தம் செய்யும் பணி இறை உணர்வுடன் நடந்து கொண்டிருந்தது. சேவா தொண்டர்கள் நேர்த்தியுடன் ஒரே மாதிரி ஆடை அணிந்து குழுக்களாகத் தத்தம் இடப்பட்ட பணிகளை மிகச் சிறப்பாகச் செய்து கொண்டிருந்தார்கள். காலை சிற்றுண்டியும் சுடச்சுடத் தயாராகிக் கொண்டிருந்தது.



காலை பக்தி இன்னிசை கச்சேரியில் இறை உணர்வோடு அமைந்தது. அதைக் குடிலிலிருந்து அனுபவித்துப் பார்த்தால் தான் தெரியும் ஏழு மணிக்குச் சுடச்சுடக் காலை சிற்றுண்டி வழங்க ஆரம்பித்து விட்டார்கள் முன்னமே அன்று காலை ஒரு சில மணி நேரம் பாத யாத்திரையைத் தொடர்ந்து செல்லலாம் என்று முடிவெடுத்திருந்த நான் இந்த தெய்வீக சூழலிலிருந்து என்னால் மீள முடியாமல் மதியம் வரை இருந்து செல்ல வேண்டும் என்று முடிவெடுத்து விட்டேன். என்ன பக்தர்களே சரிதானே என் முடிவு.

பணிவுடன் பரிமாறும் விதமும் கனிவுடன் நடத்தும் விதமும் கூடுதல் அழகு.. இறையுணர்வுக் கும் இளைப்பாறுவதற்கும் மட்டுமா குடில், கூடுதலாக மருத்துவ முகாமும் ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தது. மிக அருமையாக நிபுணர்களின் கைகளால், பக்தர்களின் கை கால்களுக்கு மசாஜ் , எண்ணெய் சிகிச்சை அளித்துக் கொண்டிருந்தனர்.

சளிக் காய்ச் சல் போன்றவற்றுக்கான மருந்துகளும் வழங்கப்பட்டன. மறு புறம் இயந்திரம் வைத்து ஒரு குழு பக்தர்களுக்கு மசாஜ் செய்து கொண்டு இருந்தார்கள். இரண்டு வேளையும் மருத்துவ முகாம் நடந் தது.

மிகவும் இறையுணர்வுடன் சிறப்பான முறையில் மகாவேல் பூஜை நடைபெற்றது. இறையுணர்வு தொடர்கிறது. வேல் பூஜை முடிந்ததும் வேல் மாறல் பாராயணம். இது முடிந்தவுடன் கூட்டு வழிபாடு நடத்தி முடித்துவிட்டு முருகன் சரண கோஷத்துடன் தலை வாழையிலையில் பக்தியுடன் அன்னதான மதிய உணவு தொடங்கியது.

சேவா தொண்டர்களின் கட்டுக் கோப்பான அர்ப்பணிப்பில் பக்தர்களின் பொறுமையில்அனை வரும் வரிசையாக நின்று முருகனின் பிரசாத உணவை வருப வர்கள் வயிறு நிறைய உண்டு மகிழ்ந்து சென்றனர். அன்னம் மேஜையில் உட் காரவைக்கப்பட்டுப் பரிமாறப்பட்டது ஒருசிலரிடம் அளவளாகியபொழுது அவர்களின் கருத்துக்கள் அடாடா அவர்கள் மதிய உணவிற்காகத் தொடர்ந்து நான்கு வருடங்களாக வருகிறார்களாம். ஏன் வரமாட்டார்கள்!! சிறந்த இறையுணர்வும் சிறந்த அன்ன உணவும் தொடர்ந்து தொய்வு இல்லாமல் வழங்கினால்!!

அவர்களது பயணத்திட்டத்தைப் பழனி முருகன் அன்னதான குடிலுக்கு வருவதற்குத் தகுந்தாற்போல் மாற்றிக் கொள்வார்களாம். மிகுந்த மனநிறைவுடன் இறையுணர்வுடன் குடிலிலிருந்து எனது அடுத்தகட்ட பயணத்தை நோக்கி நகர்ந்தேன். கண்டிப்பாக அடுத்த வருடம் இங்கு வரவேண்டும் இதேயுணர்வை அனைவருக்கும் தர என்று முருகனிடம் பிரார்த்தித்துக் கொண்டேன். யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் அல்லவா.

இந்த பக்தரின் எண்ணம் ஈடேறவேண்டும் என்று நினைக்கையில், குடில் ஏற்பாட்டாளர்களிடமிருந்து 2020 ஆம் ஆண்டுக்கான நிகழ்ச்சி நிரல் வந்தடைந்துள்ளது.

2020 பிப்ரவரி 5ந்தேதி மாலை பக்தி இன்னிசை, கூட்டு வழிபாடு ஆகியவற்றுடன் அன்னதானம் தொடங்குகிறது மற்றும் பிப்ரவரி 6ந்தேதி காலை 9 மணிக்கு மகாசக்தி பூஜை, வேல் பூஜை, வேல்மாறல் பாராயணம் நடத்தப்படுகிறது. இதைத் தொடர்ந்து காலை 10 மணி வரை பழனி பாத யாத்திரை பக்தர்களுக்கு காலை சிற்றுண்டி வழங்கப்படும். மதியம் 12 மணியில் இருந்து பக்தர்களுக்கு வாழை இலையில் அன்னதானம் வழங்கப்படும்.

இந்தாண்டுமுதல் அன்னம்பாலிப்பில் தன்னார்வத்துடன் சுயமாகச் சேவையாற்றி சமூக பனி செய்து வரும் தொண்டருக்கு மாநில அளவில் தேர்வு செய்து "வைரவேல் விருது" வழங்கப்படுகிறது.

அனைவரும் கலந்து கொண்டு முருகனின் அருளைப் பெறுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

அன்னதான சேவையில் பங்கேற்று தங்களால் முடிந்த பணிகளை செய்யலாம். இந்த சேவையில் விருப்பம் உள்ள பக்தர்கள் 99443 09719, 98421 98889 எண்களில் தொடர்பு கொண்டு கூடுதல் தகவல்களை பெறலாம் 9840305522.



# ஊஞ்சல் விரும்பும் தேவதைகள்

வீட்டில் இருக்கும் உபகரணங்களிலே பெண்களுக்கு அதிக மகிழ்ச்சியைத் தரக் கூடியது ஊஞ்சல்தான். முன்பெல்லாம் ஊருக்கு வெளியே ஆலமரத்தில் ஊஞ் சல் கட்டி பெண்கள் ஆனந்தமாக ஆடினார்கள். பின்பு படிப்படியாய் அது குறைந்து, காணாமல் போய் விட்டது.

இந்த ஊஞ்சல் ஆட்டம் உடல் ஆரோக்கியத்திற்கு மட்டுமல்ல, மன ஆரோக்கியத்திற்கும் ஏற்றது. அதனால் தான் வீடுகளில் தவறாமல் ஊஞ்சல் அமைக்கிறார்கள்.

இடவசதி குறைவாக உள்ளவர்களும் வாங்கி பயன்படுத்தும் வகையில் ஊஞ் சல்கள் வடிவமைக்கப்பட்டு இப்போது விற்பனைக்கு வருகின்றன.

ஊஞ்சல் ஆடுவது கடவுளுக்கு கூட மகிழ்ச்சி அளிக்கும் விஷயம் என்பதால் தான், கோவில்களில் இறைவனை ஊஞ்சல்களில் வைத்து சீராட்டும் பெருமை மிகு கைங்கர்யங்கள் இன்றும் நடந்துக் கொண்டிருக்கிறது.

ஊஞ்சலில் ஆடுவதால் மனதில் உள்ள எதிர்மறை எண்ணங்கள் மறைந்து பாசிடிவ் எண்ணங்கள் தோன்றுகிறது. மகிழ்ச்சி பெருகி எதிர்காலத்தைப் பற்றிய வளமான எண்ணங்களும் தோன்றுகின்றன. திருமணங்களில் `ஊஞ்சல் சடங்கு' இதன் அடிப்படையிலேயே நடத்தப் படுகிறது.

ஊஞ்சல் ஆடுவதால் மனச் சோர்வு நீங்கி உடல் உற்சாகம் பெறுகிறது.

நேராக அமர்ந்து கைகளை உயர்த்தி இரு பக்க சங்கலிகளையும் பிடித்துக்கொண்டு வேகமாக ஆடும் போது முதுகுத் தண்டுக்கு ரத்த ஓட்டம் படர்ந்து மூளை சுறு சுறுப்பாகிறது.

கம்ப்யூட்டரில் மணிக்கணக்கில் உட்கார்ந்து முதுகுத்தண்டு வளைந்துப் போன இன்றைய பெண்கள் இந்த ஊஞ்சல் பயிற்சியை தினமும் செய்தால் முதுகுத் தண்டுவடம் பலம் பெற்று கழுத்துவலி குணமடைய வழி செய்கிறது.

தோட்டத்தில் அமைக்கப்பட்டிருக்கும் ஊஞ் சலில் ஆடுவது அதிக பலனை தரக் கூடியது.

மரம் செடிகளிலிருந்து வரும் பிராணவாயு வேகமாக உடல் முழுவதும் பரவி ரத்தத்தை சுத்திகரிக்கும்.

இதயத்திற்கு சுத்தமான பிராண வாயுவை கொடுத்து இதயத்தை சீராக இயங்கச் செய்யும். தினமும் தோட்டத்தில் ஊஞ்சல் ஆடுவர்களுக்கு இதய நோய் கட்டுப்படும்.

ஊஞ்சல் ஆடுவதால் உடலில் ரத்த ஓட்டம் அதிகரித்து இதயத்திற்கு ரத்தம் சீராக செல்லும்.

சாப்பிட்டவுடன் அரைமணிநேரம் மிதமான வேகத்தில் ஊஞ்சல் ஆடுவது நல்லது.

சாப்பிட்ட உணவு நன்கு செரிக்க இந்த ஆட்டம் உதவும். கோபமாக இருக்கும் போது ஊஞ்சல் ஆடினால் கோபம் தணியும்.

வெளியில் சுற்றியலைந்துவிட்டு வந்து ஊஞ் சலில் உட்கார்ந்து கண்களை மூடி தலையை சற்றே மேலே உயர்த்தி, இரு கைகளையும் ஊஞ்சல் பலகையில் பதியவைத்து ரிலாக்ஸாக ஆடினால் களைப்பெல்லாம் பறந்து, உடலின் ஒவ்வொரு பகுதியும் ஓய்வு பெற்று நிம்மதி ஏற்படும்.

வாஸ்து படி வீட்டின் முகப்பில் ஊஞ் சல் அமைத்தால் நல்லது. இதனால்தான் பழங்காலத்தில் எல்லா வீடுகளிலும் வரவேற்பறையில் ஊஞ்சல் கட்டி வைத்திருப்பார்கள். வீட்டுக்குள் வரும் தேவதைகள் ஊஞ்சலில் ஆடப் பிரியப்படுவார்கள், ஊஞ்சலில் ஆடி நல்லது

அழகிய வடிவமைப்பில்
வார இதழ்கள்,
மாத இதழ்கள்,
பப்ளிகேஷன்ஸ்
புக் ஓர்க்,
அட்டைப்பட
வடிவமைப்பு,
நாளிதழ்கள்,
போன்றவை
தரமாகவும்
குறைந்த செலவில்
செய்துதரப்படும்
Bhaanrajg Graphics
செல்: +91-8825844033


ஆன்மிகமலர் மெயில் புக்




ஆசிரியர், வெளியீட்டாளர்
C.N.ராஜா
செல்: 8825844033

இணை ஆசிரியர்
முருகன் செல்: 7338881773

துணை ஆசிரியர்கள்
ஷியாம்சுந்தர்,
சஞ்சனா, ஸ்ரீபதி,
குருபிரியா செல்: 9894595909
புனிதவேல் செல்: 9841807572

வடிவமைப்பு
பான்ராஜாகிராபிக்ஸ்
செல்: 08825844033

நிர்வாக அலுவலகம்
aanmeegamalar.com
நெ.16/18, பாரதீஸ்வரர் காலனி, 4வது தெரு,
கோடம்பாக்கம், சென்னை 600024.
08825844033



ஆசிரியர் குழுவில் நீங்களும் இணையலாம்

நமது ஆன்மிகமலர்.காம் இதழின் ஆசிரியர் குழுவில் இணைந்து செயல்பட உங்களுக்கு வாய்ப்பு தரப்படுகிறது. ஆன்மிகம் சம்பந்தப்பட்ட விஷயங்களை எழுத ஆர்வமுள்ள அன்பர்கள் எங்களை தொடர்பு கொள்ளுங்கள், விளம்பரம் பெற விரும்புவர்களும் எங்களை தொடர்பு கொள்ளவும். உங்களை எங்களுடன் ஒருவராக இணைத்துக் கொள்கிறோம்.

தொடர்பு கொள்ளவும்
08825844033




# இறையாண்மையைப் புகுத்தக்கூடாது

1. கடவுள் என்பது முன்கூட்டியே கொள் ளப்படுகின்ற ஒரு தத்துவம். இது நிச்சயமாக பஞ்சபூத முடிவும் இல்லை. ஆவேசம் கொள்ளுதல் என்ற நிலையும் இல்லை. ஒரு குறிப்பிட்ட தனிப்புத்தகமும் அல்ல.
2. எப்படியும் இல்லை என்றால் உன்னுடைய சுத்தமான நினைவுப் பிரக்ஞையை உணரும் சக்தி தானே உனது கடவுள் அல்லது உனது சுத்தமான நினைவுத்தன்மை இல்லையா? இல்லவே இல்லை. நமது நினைவுத்தன்மையை தனியாக எடுத்து உணருகின்ற வேறொரு உறுதியான நிலையே கடவுளின் நிலை ஆகும்.
3. கடவுளின் உறுதியான எண்ணநிலையை அல்லது அவனது நினைவை யாருமே அறிய மாட்டார்கள். தெரிந்து கொள்ளவும் மாட் டார்கள். இதுதான் கடவுளின் தனித்தெய்வீகம்.
4. தெய்வீகத்தன்மை என்பது ஒரு மனிதனின் பிரத்யேகத்தன்மை ஆகும். அதன் சீர் சிறப்பு என்ற செல்வத்தன்மைகள் எல்லாம் ஒரு மனிதனின் அற்புத குணவெளிப்பாட்டின் எடை காட்டும் தன்மையை காட்டுகிறது.
5. தெளிவும் தெளிவுத்தன்மையும் ஆண்டவனின் நீதிக்கட்டளை கள். இந்த இரண்டு வார்த்தைகளுக்கு சமமான வார்த்தைகளே கிடையாது. அதனால் தெளிவுத் தன்மை என்பதும் தெளிவான மக்கள் என்பவர்களும் உண்மை யின் நீதிபதிகளாக ஆகிறார்கள்.
6. நிறைவேற்றப்படுகின்ற கொள்கை என்றால் என்ன? கொள்கை என்பதே அதுதான். அதுவே நிறைவேற்றப்படும்பொழுது சிந்தனை என்று ஆகிறது. சிந்தனை என்பது கொள்கைகளை நினைக்கும்பொழுது தானாகத் தோன்றுகின்ற கொள்கையே அல்ல. ஏனென்றால் கொள்கையை சிந்தனை வடிவமாகவும் எண்ண நினை வாகவும் ஒன்றையே இரண்டுமுறை சிந்தித்து முடிவெடுக்க வழியே இல்லை. ஒன்று எண்ணம். மற்றொன்று வடிவம். இரண்டும் வேறு வேறு.
7. மிகவும் மேன்மையாய் கூடி சிந்திக்கின்ற ஒரு சிறிய குழுவை கொண்டதே கொள்கையை நிறைவேற்றுகின்ற கழக மாகும். சிந்தனைக்கு என்று ஏற்படுத்தப்பட்ட கழகம் எப்போதும் சிந்திக் கின்றது. நாட்டுக்கு செம்மையைத் தருவிக்கின்றது.
8. ஒரு நாட்டின் இயற்கையான எல்லைகள் நம்மால் வகுக்கப்படுவதில்லை. அது கடவுளால் ஏற்கனவே வகுக்கப்பட்டு விடுகிறது. இதுதான் ஆப்பிரிக்கா, இதுதான் இந்தியா என்பதைப் போன்றது. மனிதன்தான் இனி அந்நாட்டுக்குள் இருக்கின்ற உண்மைகளை வெளிக்கொணர்ந்து அதை உணர்ந்து அதன்படி செயல்பட வேண்டும்.
9. ஒரு நாட்டின் உரிமையுள்ள சொந்த இறையாண்மை என்பது நாமாக கண்டுபிடித்த ஒரு அற்புத வார்த்தை. அதனால் ஒருவரின் சொந்த இறையாண்மையுள் மற்றொருவர் தனது இறையாண்மையைப் புகுத்தக்கூடாது என்று சொல்லுகிறோம். ஆனால் எல்லா நேரங்களிலும் ஒவ்வொரு நாடும் தனது சொந்த இறையாண்மையை தானே ஏற்படுத்திக் கொள்ளுகிறது.
10. எப்பொழுதும் சண்டையைத் தூண்டாதே. போரை அறிவிக் காதே. இது மனிதன் செய்கின்ற மிகப்பெரிய பாபம் ஆகும்.



ஞானச்சேரி ஞானிகள்
பூஜ்ய ஸ்ரீசத்குரு சதாசிவ பிரும்மேந்திரரின்
அருளுரையிலிருந்து தொகுத்தது மேலும் விபரங்களுக்கு
எஸ்.மகாதேவன், போன் 098410 28028


● ஆன்மீகம் ● தத்துவம் ● உடல்நலம் ● பலன்கள் ●
புத்தம் புதிய ஆன்மீக செய்திகளை தினமும் படியுங்கள்
www.aanmeegamalar.com
ஆன்மிகமலர்.காம்

# பொங்கலன்று கரும்பை தின்ற கல்யானை

## குழந்தை பாக்கியத்திற்கு கரும்பு படையல்



பொங்கல் என்றால் நினைவுக்கு வருவது மாடு மட்டும்தான், ஆனால் மதுரை மீனாட்சி கோவிலில் கல்யானைக்கு விஷேச தினமாக கொண்டாடப்படுகிறது.

மதுரை மீனாட்சி அம்மன் கோவிலில் ஒவ்வொரு பொங்கல் அன்றும் கல் யானைக்கு கரும்பு தந்த லீலை ஒரு விழாவாக நடத்தப்பட்டு வருகிறது.

மதுரையை தலைநகராகக் கொண்டு அபிஷேக பாண்டியன் ஆட்சி செய்து கொண்டிருந்த காலகட்டம் அது.

ஒரு பொங்கல் திருநாள் அன்று அமைச்சர்கள், படைவீரர்கள் புடைசூழ மதுரை மீனாட்சி அம்மன் கோவிலுக்கு வந்தான் அபிஷேகப் பாண்டியன். கோவிலுக்கு மன்னர் வருவதைக் கண்ட பக்தர்கள் அனைவரும் அவனுக்கு வழிவிட்டு ஒதுங்கினர்; ஒருவரைத் தவிர. அதைக் கண்டு மன்னனுக்கு கொஞ்சம் கோபம் வரத்தான் செய்தது.

அதற்குள் பணியாள் ஒருவன், 'மன்னா! இவர் ஒரு சித்தர். சித்து வேலைகள் பலவற்றை நிகழ்த்தி இருக்கிறாராம்' என்றான்.

தன்னை அலட்சியப்படுத்தியவர் ஒரு சித்தர் என்று அறிந்ததும், அவர் அருகில் சென்று வணக்கம் தெரிவித்தான் மன்னன். ஆனால் சித்தர் என்று அடையாளம் காட்டப்பட்டவரிடம் இருந்து மன்னனுக்கு பதில் மரியாதை கிடைக்கவில்லை. இருப்பினும் மன்னனே அந்த சித்தரிடம் பேசினான். 'தாங்கள் அற்புதங்கள் நிகழ்த்துவதாக கேள்விப்பட்டு இருக்கிறேன். முதியவரை இளைஞராகவும், இளைஞரை முதியவராகவும், பெண்ணை ஆணாகவும், ஆணைப் பெண்ணாகவும் மாற்றுகிறீர்களாமே.. ஊமையை பேச வைக்கிறீர்கள், குருடர்களை பார்க்க வைக்கிறீர்கள் என்றும் கேள்விப்பட்டேன்! அது உண்மைதானா?' என்று கேட்டான்.

'எல்லாம் உண்மையே! எனக்கு எல்லாக் கலைகளும் தெரியும்' என்றார் அந்த சித்தர்.

இருந்தாலும், மன்னனுக்கு அந்த சித்தரின் அற்புதங்கள் மீது நம்பிக்கை வரவில்லை. அவரை சோதிக்க நினைத்தான்.

'சரி சித்தரே! உங்கள் அற்புதத்தை நேரில் பார்க்க ஆசைப்படுகிறேன். உங்களால் இப்போது அதை செய்து காண்பிக்க முடியுமா?' என்றான்.

மன்னன், தன்னையே சோதிக்க நினைப்பதை எண்ணி அவருக்கு கோபம் வந்தது. 'என்ன... என்னையே சோதிக்கிறாயா?' என்றார்.

'ஆமாம்.. அதில் என்ன தவறு இருக்கிறது? நான் உங்கள் அற்புதத்தை நேரில் பார்த்தால் தானே உண்மையை உணர முடியும்' என்ற மன்னனிடம் 'இப்போது நான் என்ன செய்ய வேண்டும்?' என்றார் அந்த சித்தர்.

'இந்த கல்லால் ஆன யானை சிலை, கரும்பை உண்ணும்படி செய்ய வேண்டும். அப்படிச் செய்தால் நீங்கள் கேட்டதை எல்லாம் தருகிறேன்' என்று, அருகில் இருந்த யானை சிலையை காண்பித்தான். தன் கையில் ஒரு கரும்பையும் எடுத்துக்கொண்டான்.

சித்தர், அந்த யானைச் சிலையை கூர்ந்துப் பார்த்தார். அடுத்த நொடியே அந்த கல் யானை உயிர் பெற்று முன்னோக்கி நடந்து வர ஆரம்பித்தது. அதைப் பார்த்த எல்லோரும் திகைத்துப் போய் நின்றனர். அரசன் அருகில் வந்த அந்த யானை, அவன் கையில் இருந்த கரும்பை வாங்கித் தின்றது.

இன்னொரு முறை அந்த யானையை பார்த்தார் சித்தர். உடனே அது, அரசன் கழுத்தில் கிடந்த மாலையை தனது துதிக்கையால் பறித்தது. அரசன் திடுக்கிட்டுப் போனான். மன்னனின் படைவீரர்கள் சிலர் கோபத்தில் சித்தர் மீது பாய வர, அவர்களை நோக்கி கை காண்பித்தார் அவர். அடுத்த நொடியே அவர்கள் அனைவரும் சிலை ஆனார்கள்.

அதன்பிறகு தான், அந்த சித்தர் மாபெரும் மகான் என்று உணர்ந்து கொண்டான் மன்னன். தன்னை மன்னிக்குமாறு அவரது காலில் விழுந்து வேண்டினான்.

அவனை மன்னித்த சித்தர், 'உனக்கு என்ன வேண்டுமோ கேள்?' என்றார்.

மன்னனும், தனக்கு குழந்தை பாக்கியம் இல்லாத குறையைக் கூறி, மழலைச் செல்வத்தைக் கேட்டான். சித்தர், 'அப்படியே ஆகட்டும்!' என்று அருள்பாலித்தார். அக்கணமே சித்தர் மாயமானார். உயிர்ப்பெற்று வந்த கல் யானை மீண்டும் கற்சிலையாக மாறியது. சிலையாக மாறிய வீரர்கள் உயிர்ப்பெற்றனர்.

அதன் பின்னர் தான், சித்தர் வடிவில் வந்தது சொக்கநாதர் என்பதை உணர்ந்தான், மன்னன். அடுத்த ஒரு வருடத்தில் சொக்கநாதர் அருளியபடியே, அபிஷேக பாண்டியனுக்கு ஒரு மகன் பிறந்தான். அவன் தான் விக்கிரம பாண்டியன்.

இந்த நிகழ்வை கொண்டாடும் வகையில், மதுரை மீனாட்சி அம்மன் கோவிலில் ஒவ்வொரு பொங்கல் அன்றும் கல் யானைக்கு கரும்பு தந்த லீலை ஒரு விழாவாக நடத்தப்பட்டு வருகிறது.

இந்த தினத்தில் குழந்தை பாக்கியம் வேண்டி மக்களும் கரும்பை படைக்கின்றனர்.

கரும்பு தின்றதாக கூறப்படும் கல் யானையை மதுரை மீனாட்சி அம்மன் கோவிலில், சுவாமி சன்னிதிக்கு இடப்புறத்தில் இன்றும் நாம் பார்க்கலாம். பொங்கல் தினத்தில் இந்த கல்யானையை தரிசிப்பது சிறப்பு.

– ராஜலட்சுமி, அழகர்கோவில் மதுரை.

www.aanmeegamalar.com



www.aanmeegamalar.com

# நாம ஜபம்

நாமஜபம் செய்யும்போது மன ஒருமைப் பாட்டை எவ்வாறு மேம்படுத்துவது என்பது பற்றி பார்ப்போம்

நாமஜபம் செய்ய ஆரம்பித்ததும், மனதில் மற்ற எண்ணங்கள் தொடர்ந்து வருவதே நாம் எதிர்கொள்ளும் முக்கிய தடைகளில் ஒன்றாகும். பெரும்பாலும் இவை நாமஜபத்தின் மீதான சந்தேகங்களினாலும் ஆழ்மனதில் பதிந்துள்ள எண்ணப்பதிவுகளாலும் ஏற்படுகின்றன. இந்த கட்டுரையில் நாமஜபத்தை மன ஒருமைப் பாட்டுடன் செய்வதை மேம்படுத்துவதற்கான சில நடைமுறை குறிப்புகளை கொடுத்துள்ளோம். மன ஒருமைப்பாட்டுடன் நாமஜபம் செய்வதை கருவியாக கருதாமல், இலக்காக மனதில் நிறுத்திக்கொள்ள வேண்டும்.

நாமஜபம் செய்யும்போது மன ஒருமைப் பாட்டை எவ்வாறு மேம்படுத்துவது

நாமஜபம் செய்யும்போது எண்ணிக்கையில் கவனம் கொள்ளுங்கள்: மணிகளால் ஆன மாலை (ஜபமாலை) அல்லது எண் காட்டியை கையில் வைத்துக் கொண்டு ஒருவர் நாமஜபத்தின் எண்ணிக்கையில் கவனம் செலுத்தினால் மன ஒருமைப்பாட்டை அடையலாம்.

நாமஜபத்தை உரக்க கூறுங்கள்: நாமஜபம் செய்யும் வேளையில் மனம் அலைந்து கொண்டே இருக்கும் போது, சில நேரம் சத்தமாக நாமஜபத்தை செய்வது நல்லது அல்லது நாமஜப ஒலிப்பதிவை கேட்பது பயனளிக்கும். பிற எண்ணங்கள் குறைந்து மன ஒருமைப்பாட்டை ஓரளவு அடைந்தவுடனும் நாமஜபத்தை நாம் மனதளவில் தொடரலாம்.

நாமஜபத்தின் வேகத்தை அதிகரிக்கவும்: அதுபோல நாமஜபத்தின் வேகத்தை நாம் சிறிது நேரம் அதிகரிக்க செய்து, மன ஒருமைப்பாட்டை அடைந்தவுடன் வேகத்தை குறைத்து கொள்ளலாம்.

ஒரு அமைதியான இடத்தில் நாமஜபம் செய்யுங்கள்: கவனம் செலுத்துவதில் நமக்கு சிரமம் இருந்தால் நாமஜபத்தை அமைதியான இடத்தில் அல்லது ஸத்வ கூறினை ஈற்கும் இயற்கையான சூழல் மற்றும் மத வழிபாடு ஸ்தலத்திலும் செய்யலாம்

விழித்தவுடனும் படுக்கைக்கு செல்லுவதற்கு முன்பும் நாமஜபம் செய்யுங்கள்: காலை விழித்தவுடனும் படுக்கைக்கு செல்லுவதற்கு முன்னும் மனதில் இவ்வுலக விஷயங்கள் பற்றிய செயற்பாடு குறைவாக இருப்பதால் இந்த நேரத்தில் மன ஒருமைப்பாடு அடைவது எளிதாக இருக்கும்.

சுவாசத்துடன் நாமஜத்தை ஒத்திசைக்கவும் : சுவாசத்துடன் நாமஜமத்தை ஒருங்கிணைத்தல் என்ற எங்கள் கட்டுரையில் குறிப்பிட்டுள்ளபடி, சுற்றுச்சூழலில் இருந்து எண்ணங்கள் ஒருவரது சுவாசத்துடன் மனதில் நுழைந்து விடுகிறது. நாம் சுவாசத்தையும் நாமஜமத்தையும் ஒருங்கிணைத்தால் எண்ணங்களால் ஏற்படும் தாக்கத்தின் விளைவு குறைகிறது.



முத்திரைகளுடன் நாமஜமத்தை முழுமையாக் குதல் : இரு கைகளிலும் உள்ள ஆள்காட்டி விரலின் முனையை கட்டைவிரல் நுனியுடன் தொடவும். இது எண்ணங்களை குறைக்க உதவுவதுடன் மன ஒருமைப்பாடு அடையவும் உதவும் முத்திரைகளில் ஒன்றாகும்.

சுய ஆலோசனை: ஒருவரின் செயல்கள் (நடத்தை), எண்ணங்கள் மற்றும் எதிர்மறை எண்ணங்கள் (மனப்பான்மை) அல்லது உடல் நிலையில் நேர்மறை மாற்றங்களை சுயமாக கொண்டு வருவதற்கு பரிந்துரைக்கப்படும் சிகிச்சை தரக்கூடிய சொற்றொடர் அல்லது முன்னோக்கு , சுய ஆலோசனை முறையாகும்

நாமஜபத்திற்கான சுய ஆலோசனை முறை : தினந்தோறும் சுய ஆலோசனையை மீண்டும் மீண்டும் கூறுவதால் நாமஜபத்தில் முழு கவனம் செலுத்தும் திறன் மேம்படுத்தப்படுகிறது. நாம் சுய ஆலோசனையை பின்வருமாறு வடிவமைக் கலாம்: “எப்பொழுதெல்லாம் நான் பயனற்ற எண்ணங்களை நினைக்கிறேனோ, அப்பொழுது அதனை புரிந்து கொண்டு கவனத்தை நாமஜபத்தின் மீது செலுத்துவேன்.” சுய ஆலோசனை எடுத்துக்கொள்ளும் முறை பின் வருமாறு:

1 2 நிமிடங்கள் நாமஜபம் செய்யவும்

மனதளவில் சுய ஆலோசனையை 5 முறை கூறவும்

நன்றி செலுத்தவும்

தினமும் இவ்வாறு 35 முறை செய்ய வேண்டும்.

கருத்தூன்றிய நமது பார்வையை நிலை நிறுத்துவது: நாமஜபம் செய்யும் போது கண் சிமிட்டாமல் நமது பார்வையை ஒரு பொருள் அல்லது புள்ளியின் மீது நிதானமாகப் பார்ப்பதால், மனம் ஒருமைப்பாடு அடைகிறது.

நாமஜபத்தை கண் மூடிய நிலையில் செய்வது: வெளிப்புற கவனச்சிதறல்கள் காரண மாக எண்ணங்கள் அதிகரிக்கலாம். கண் மூடிய நிலையில் நாமஜபம் செய்யும்போது மன ஒருமைப்பாடு மேம்படுத்தப்படுகிறது. ஒருவரை தூக்கம் ஆழ்த்தினால், கண் திறந்த நிலையில் நாமஜபம் செய்வது நல்லது.

இறைவனின் அல்லது உச்சரிக்கும் தெய்வத் தின் உருவ படத்தின் முன் அமர்ந்து நாமஜபம் செய்வது: முடிந்தால் நாம் இறைவனின் உருவப் படத்தையோ அல்லது உச்சரிக்கும் தெய்வத்தின் முன் அமர்ந்தோ நாமஜபம் செய்யலாம். இவ்வாறு செய்வதால் மனம் இறை தத்துவத்தில் ஈர்க்கப்படுகிறது.

இறைவனை, அல்லது நாமஜபத்திற்குரிய தெய்வத்தை அல்லது ஒருவரது குருவை நினைவு கொள்ளலாம்: இது நம் ஆன்மீக உணர்வை அதிகரிக்கலாம். அவர்கள் மீதான பக்தியால் மன ஒருமைப்பாட்டுடன் கூடிய நாமஜபம் எளிதில் நேரிடுலாம். கூடுதலாக, ஆன்மீக உணர்வை அதிகரிக்க எடுக்கும் அனைத்து முயற்சிகளும் நாமஜபத்தின் தரத்தை மேம்படுத்தும்.

சுருக்கம் நாம் நாமஜபம் செய்யும் போது மன ஒருமைப்பாட்டை மேம்படுத்துவது எப்படி:

நாம் மன ஒருமைப்பாட்டுடன் நாமஜபம் செய்தால் ஆனந்தத்தை அனுபவிக்கலாம். இது நமது ஆழ்மனதில் நாமஜபத்திற்கான எண்ணப்பதிவை உறுதிப்படுத்துகிறது மற்றும் மன ஒருமைப்பாட்டுடன் நாமஜபம் செய்யும் போது கடவுளிடமிருந்து அதிக பாதுகாப்பைப் பெறுகிறோம்.

இருப்பினும், மன ஒருமைப்பாட்டுடன் நாமஜபம் செய்ய முடியாவிட்டாலும் கூட, நாமஜபத்தை விடாமுயற்சியுடன் செய்ய வேண்டும். மன ஒருமைப்பாட்டை இறுதியில் அடைய முடியும். சுமார் ஆறு மாத காலப்பகுதியுள், நாமஜபம் செய்யும் போது மன ஒருமைப்பாட்டினை மேம்படுத்தப்படுவதை இலக்காக வைத்துக் கொள்ளலாம்.

– தகவல் ஸனாதனின் கையேடு மற்றும்
www.hindujagruti.org


உலக வரலாற்றில் முதன் முறையாக
ஆன்மிகமலர்
சென்னையில் ஒரு கலைக்கோயில்
இலவச
e-mail-book
எந்தவித கட்டணமுமின்றி இலவசமாக பெற
உங்கள் இ-மெயில் முகவரியை
கீழ்காணும் வாட்சப் எண் அல்லது இமெயில்
முகவரிக்கு அனுப்பிவையுங்கள்
வாட்சப் எண்
8825844033
aanmeegamalar@gmail.com
முடிந்த அளவு Share செய்து எங்கள் பணிக்கு உதவுங்கள்